# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 23-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 37-ம் இலக்கம்


# உண்மை, நீதி நிலவ வேண்டும்படி பரிசுத்தபிதா கேட்கிறார்

பேர்ளின் நகர எதிர் காலத்தையிட்டுக் கிழக்கும், மேற்கும் அணுச்சக்திப் போருக்கு ஆயத்தஞ்செய்தும், அணுக்குண்டுகளை வெடித்துப் பரீட்சித்தும், துருப்புகளைத் திரட்டியும் கொண்டிருக்கும் இவ்வேளை, முன்சென்ற பாப்புமார்கள்போல 23-ம் அருளப்ப பாப்புவும் சாந்திமொழிகூறினார். இம்மாதம் 10-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை தமது கோடைகால மாளிகைக்குப் பேட்டி காணவந்த 15,000 மக்களுக்கு இவ்வுரை நிகழ்த்தியபொழுது 12 கருதினல்மாரும் சமுகமாயிருந்தனர்.

யுத்தத்தால் எல்லாவற்றையும் இழப்போம்; சமாதானத்தால் எல்லாம் அடைவோம். வெற்றி முரசங்கொட்டும் யுத்தங்களும், தோல்வியால் மனமுடைந்த மக்களும் இவ்வுலகத்தில் தேவையில்லை; சமாதானத்தின் நிறைவே தேவை. அண்மையிலோ, கிட்டிய காலத்திலோ போர்தொடங்குமென்று அஞ்சவேண்டியதில்லை, என்பது தமது நிதார்த்தமான கருத்தெனப் பாப்பரசர் கூறினார். எனினும், போர் கருக்கூட்ட முன்னமே உலக வல்லரசுநாடுகளிடம் சமாதானத்தைப் பரிந்து கேட்க விரும்பினர்.

### துன்பமும் இன்பமும்

யுத்தம், சமாதானம்—இவ்விருபதங்களும் தனித்தவர்கட்கும், முழு உலகத்துக்கும் துன்பத்தையோ இன்பத்தையோ ஊட்டவல்லன.

1914-ம் ஆண்டிலிருந்து கடந்த ஐம்பதாண்டுகளாக உலகம் இரத்தந் தோய்ந்துபோனதைக் கண்ணுற்றவர்கள், எதிர்காலத்தில் என்ன நேரலாம் என எண்ணிக் கிடுநடுங்குகின்றனர். அபார அழிவையுண்டு பண்ணக்கூடிய ஆயுதங்களை மனிதர் இன்னுமே தேடி ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். முந்திய பாப்புமாருடைய அறிவுரைகளைத் தாமும் அழுத்திக்கூறி, பொதுமக்களின் ஆட்சிப்பொறுப்பைக் கொண்டிருப்பவர்களை விசேஷ கரிசனையுடன் சமாதானத்தைத் தேடும்படி அழைக்கிறதாகப் பரிசுத்தபிதா கூறினார். மக்கள் துன்பத்தைப் பார்த்துத் திருச்சபைமாதா வேண்டாவெறுப்பாயிருக்க முடிவதில்லை.

### பொறுப்புகள்

எனவேதான் மக்களை ஆட்சி செய்யும் பொறுப்புள்ளவர்களை விளித்து, உலக நடபடியிலும், கடவுளின் நீதியாசனத்துக்கு முன்னிலையிலும் தாம் பாரதூரமான பொறுப்புள்ளவர்களென உய்த்துணருமாறு கேட்டுநிற்கிறோம். காரணமின்றிப் போர்க்கோலங்கொள்ளாதேயுங்கள்.

பலாத்காரம் தலையெடுக்காமலும், உண்மை, நேர்மை, நீதி நிலைகொள்ளவுஞ்செய்ய மனிதயுக்தி, விவேகம் யாவும் ஒன்றுகூடி உழைப்பது அவசியம். நேர்மையுடனும் சுதந்திரத்துடனும் கலந்தாலோசிப்பதினால், தேசமக்களுடையவும், தனித்தவர்களுடையவும் ஆதார சுதந்திர உரிமைகளைக் காப்பாற்ற முடியும்.

அதற்கு மனதைத் திறந்து அங்குள்ள அழுக்காறு அனைத்தையும் வெளியேற்றவேண்டும்.

### அமைதியாட்சி

குருமார், சந்நியாசர்கள், கன்னியாஸ்திரிமார், நல்மனமுள்ளவர்களையும், சிறப்பாகத் துன்பப்படுவோரையும் சமாதானத்துக்காய்த் தம்முடன்செபிக்கும்படி ஏவுகின்றார். உலகத் தலைவர்களின் புத்தியைக் கடவுள் தெளிவுபடுத்தி, சித்தத்தை ஏவித் தூண்டி, கொடுந் தேசாபிமானத்தால் மனக்குருடராகாமல், சமுதாயத்தை நீதியாலும், அன்பாலும் புனரமைக்கும்படி செய்ய வேண்டுவோம். பாவத்தால் பிளவுபட்டிருக்கும் சகல தேசமக்களும் கிறிஸ்துவின் அமைதியாட்சியை ஒப்புக்கொள்ளுமாறு தேவ அன்னையை விசேஷவிதமாய் வேண்டிக்கொள்ளுங்கள் என்றார் பரிசுத்தபிதா.

## வீதிகளை உபயோகிப்போருக்காகப் பரிசுத்தபிதாவின் செபம்

"போக்குவரத்துச் சாதனங்கள் தற்பொழுது அடைந்திருக்கும் திறமைபோல முன் இருக்கவில்லையென்பதில் நாம் பெருமை கொண்டாலும், இவைகளின் உபயோகம் சில தருணங்களில் சோகத்தில் முடிவதை நாம் காணுகிறோம்" எனப் பொதுப் பேட்டியொன்றில் கூறினார் பரிசுத்த பிதா. "பிரயாணத்தில் உயிர் இழந்தவர்களதும், காயமுற்றோரதும் தொகை மலைபோல் உயர்ந்து வருகிறது; யுத்த களங்களில் உயிரிழந்தோர் தொகைபோலாகிறது. ஆகவே, பொதுப் பாதைகளை உபயோகிப்பதில் உயிரைக் காத்துக் காப்பாற்றும் பொறுப்பு எல்லோர் கவனத்தையும் கவரவேண்டும்; இந்தப் பொறுப்பை எவராவது கழித்து விடமுடியாது" எனத் தொடர்ந்து கூறினார்.

பேட்டி முடிவில் பரிசுத்த பிதா கார்ச்சாரதிகள் செபிக்கத் தகுந்த செபம் ஒன்றைச் செபித்தார்.

சருவவல்லப சருவேசுரா! நடப்பதிலோ, வாகனங்களை ஓட்டுவதிலோ வீதிகளை உபயோகிக்கும் உமது அடியார்மேல் உமது ஆசியைப் பொழிந்தருளும். அவர்கள் விவேகத்தையும், விழிப்பையும் கற்று அச்சம் நிறைந்தவர்களாய்த் தாமும், பிறரும் சேமமாய்ப் பிரயாணஞ் செய்ய வழி செய்வார்களாக. பயணக் கடினத்தாலும், சரீர சோர்வினாலும், யோசனையற்ற விரைவினாலும் மனிதருக்கு வரக்கூடிய ஆபத்துகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றியருளும்.

தொபியாசின் மகனுக்கு அதிதூதன் இறப்பியேலை வழித்துணையாகத் தரச்சித்தமான தேவரீர்! உமது மக்களைச் சரீர, ஆத்தும ஆபத்துகளிலிருந்து விடுவித்து, அவர்கள் பூலோக பாதைகளில் உம்மை நினைவுகூர்ந்து நேர்மையாய் நடப்பதினால் பரலோக வாழ்விற்கு வந்துசேரத் தக்கவர்களாகக் கிருபை செய்தருளும். இந்த மன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் மூலமாக ஏற்றுத்தந்தருளும், ஆமென்.

## வத்திக்கான் தூதுவப்பணிக்கு இந்திய குருக்கள்

சென்ற ஆனித் திங்கள் இந்திய நாட்டுக் கர்தினால் மேன்மை தங்கிய கிராசியாஸ் ஆண்டகை அவர்கள் வத்திக்கானுக்குச் சென்றபோது, பாப்புவின் முன்னாள் இராச்சிய செயலாளர் மேன்மை தங்கிய தார்தீனி ஆண்டகை அவர்கள், உலகின் பல பாகங்களிலும் வத்திக்கான் வெளிநாட்டுத் தூதுவப்பணிக்குப் போதிய குருக்கள் இல்லாக் குறையைக் கூறி வருத்தம் தெரிவித்துக் கொண்டார். அவர் மேலும் கேட்டுக்கொண்டதாவது: "இந்திய மேற்றிராணி ஆண்டகைகள் வத்திக்கானின் இத்தூதுவப்பணிக்கு ஏன் தகுந்த குருக்களைத் தெரிந்தெடுத்து அனுப்பாமல் இருக்கின்றனர்? ரோமையில் ஊர்பன் கல்லூரியில் பல ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் பணியாற்றுகையில், இந்திய குருக்கள் நுண்அறிவும், குருத்துவ உள்ளமும் கொண்டிருப்பதைக் கண்டேனே."

இந்திய அரசு தன் வெளிநாட்டுத் தூதுவத் தொடர்பை வெகு எளிதில் ஏற்படுத்தியுள்ளது என்றால், இந்திய கத்தோலிக்க திருச்சபையும் வெகு எளிதில் தன்னிடமுள்ள தகுதி நிறைந்த சில இளம் குருக்களை வத்திக்கானின் வெளிநாட்டுத் தூதுவப்பணிக்குத் தியாகம் செய்யக்கூடும். கோவாவைச் சேர்ந்தவரான பிளாஸ்கோ கொலாஸோ சுவாமிகளே இவ்வித வத்திக்கானின் பணிக்குள் புகுந்துள்ள முதல் இந்திய குரு. இவர் தென் அமெரிக்காவில் கொலம்பியாவில் பாப்புவின் தூதுவர் ஆலயத்தில் பணியாற்றி வருகின்றார். சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த பீட்டர் பிண்டோ சுவாமிகள் ரோமையில் இன்னும் ஓர் ஆண்டில் தன் படிப்பை முடிப்பார்; அதன்பின் இவரும் வத்திக்கானின் இப்பணியில் புகுவார். பம்பாய் அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த ஐவன் டயஸ் சுவாமிகள் இத்திங்கள் 8-ம் நாள் ரோமைக்குப் பயணமானார்; அங்கு மூன்று வருடங்கள் சட்டக் கல்வி பயின்றபின்பு அவரும் இச்சேவையை மேற்கொள்வார்.

### விவிலிய மாநாடு

இத்திங்கள் 25—30 திகதிகளில் ரோமை நகரில் விவிலிய மாநாடு ஒன்று நடைபெறும். குரு மடங்களையும், பல்கலைக்கழகங்களையும் கண்காணித்துவரும் திருச்சங்கத்தின் ஆதரவில் இது நடைபெறும். உலகின் பல நாடுகளினின்றும் 200 அங்கத்தினர் இம் மாநாட்டில் கலந்து கொள்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## அமலோற்பவ மரியநாயகிசபை

### ஞானஒடுக்க பிரசங்கிகளின் புதிய ஸ்தாபனம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே திருத்தொண்டாற்றி வருகின்ற அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள்சபைக் குருமாருக்கெல்லாம் நிகழும் 1961-ம் ஆண்டு புரட்டாதி திங்கள் 11-ந்திகதி மிகமகிழ்ச்சிக்குரிய ஒருசுபநாளாகும்.

குருசுக்குருமார் இலங்கையில் கால்வைத்து இப்பொழுது 125 வருடங்கள் ஆகின்றன. இந்த நீண்டகாலத்தின் ஆரம்பத்திலே இவர்கள் இலங்கை முழுவதிலுமே தொண்டாற்றிவந்து, பின்னர் யாழ்ப்பாணத்தையும், கொழும்பையும் தங்களது திருத்தொண்டுகளின் தலங்களாக்கிக் கொண்டனர். இக்காலத்திலே இவர்கள் யாழ்ப்பாண மேற்றிராசன இல்லத்தைத் தங்கள் இரவல்மனையாகப் பாவித்துக்கொண்டுவந்தமையால் தங்களுக்கெனச் சொந்தமாக ஒருஇல்லம் இல்லாக்குறையைப் பொறுமையுடன் சகித்துவரலாயினர்.

இப்போது மகாவந். மேற்றிராணியாண்டகைஅவர்களின் தயவாலே கொழும்புத்துறை, சஞ்சூசையப்பர் ஸ்தாபனத்துக்கு மேற்குப்புறமாக அமைந்திருக்கும் காணியையும், கட்டடங்களையும் தங்கள்சொந்த இல்லமாக இவர்கள் பெற்றுக்கொள்ளும் அதிர்ஷ்டம்பெற்றுள்ளனர். இந்தப் புதியஇல்லம் சென்ற11-ந்திகதியன்று மகாவந். ஆண்டகைஅவர்களால் பெருந்தொகையான குருமார், கன்னியாஸ்திரிமார், அமலோற்பசபை அனுதாபிகள் மத்தியிலே அதிபூச்சியமாய் ஆசீர்வதித்துப் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டது.

**இப்புதிய இல்லத்தின்**

பெயர்: **“அமல உற்பவம்”**

முகவரி: கொலம்பகம், யாழ்ப்பாணம்.

மாகாண உபசிரேஷ்டர்:

சொற்சுவை, பொருட்சுவை ஒருங்கே அமையப்பெற்ற தமதுபிரசங்கங்களினால் இலங்கைமுழுவதிலும் “சனரஞ்சித மதுரபிரசங்கி” யென ஒருவாய்ப்பட அழைக்கப்படுகிறவரான அதிவண Z. N. குருஸ் சுவாமிஅவர்கள்.

கடந்துபோன எத்தனையோ ஆண்டுகளாகக் குருசுச்சுவாமிமாரின் சேவையைத் தலைமுறை தலைமுறையாகப் பெற்ற எத்தனையோமக்கள் இந்தப் புதியஇல்லத்தையிட்டு உவகைகொள்ளாதிருக்க மாட்டார்கள். மகாவந். மேற்றிராணிஆண்டகை அவர்கள் காணியையும், கட்டடங்களையும் கொடுத்துதவியமையானது தமது தாயகமாகிய அமலோற்பவ மரியநாயகிசபைத்தாய்மடத்துக்கு அவர்கள் செய்யாமல்செய்த மாபெரும் பரோபகாரச் செயலாகுமென்பதில் சந்தேகமில்லை. ஆண்டகைஅவர்கள் செய்த இந்தப்பேருதவியானது ஒரு பெருங்காரியமாயிருப்பது மாத்திரமல்ல, அமலோற்பவமரியநாயகிசபைக் குருமார்மட்டிலே அபிமானமும், நன்றியும், அன்புமுள்ள எத்தனையோ மக்கள் கண்டுபாவிக்கக்கூடிய ஓர் பெரும்கிருத்தியமுமாய் இருக்கின்றதென்பது இவ்விடம் கவனிக்கப்படவேண்டியதொன்றாகும்.

இப்புதியஇல்லத்திலுள்ள வெறுங் கட்டடங்கள் துப்புரவாக்கப் பட்டிருக்கின்றன. ஒருசொற்ப தளபாடங்கள் மாத்திரம் தற்போது அறைகளில் உண்டு. கட்டடங்களில் தற்போதைய அவசியத்துக்கேற்ற சொற்பமாற்றங்களே செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குப் பெருந்தொகையான பணம் இப்போதேவிடப்பட்டிருக்கின்றது. இதுவரை செய்யப்பட்ட செலவுப்பணங்கள் சிலபரோபகாரிகளால் முற்பணமாக உதவப்பட்டுப் பின்னடியிலே தகுந்தகாலத்தில் அவர்கட்குக் கொடுபடவேண்டியனவாய் இருக்கின்றன. இவைகளுக்கு இன்னும்வேண்டியசெலவுகளைத் தந்துதவும்படியாக அமலோற்பவநாயகி பக்தர்களைப் பரிவாக வேண்டுகின்றோம்.

இந்தஇல்லத்தில்வதியும் ஞானஒடுக்கப்பிரசங்ககுருமார் யாழ்ப்பாண மேற்றிராசன விசாரணைப்பங்குகளிலே நல்லவேலைசெய்து ஆத்துமங்கள்மேல் தேவன் தமதுவரப்பிரசாதங்களை ஏராளமாய்ப்பொழிய உதவிசெய்து வருவார்கள். இந்தஇல்லத்தை எங்கள் ஆண்டவராகியயேசுக்கிறிஸ்துநாதரும், அவரின்அமலோற்பவதாயாரும், அர்ச். சூசையப்பரும் ஆசீர்வதித்துக் காப்பாற்றி அதுவிருத்திபெற்றுவரச் செய்வார்களாக.

— அபிமானி

## அர்ச். வின்சென் டீ போல்

## அநாதைகள் விடுதிச்சாலையில் பழையமாணவர்தினம்

—மகோணவில் உள்ள அர்ச். வின்சென் டீ போல் அநாதபிள்ளைகள், சீர்திருத்த விடுதியைச்சேர்ந்த 92 பழையமாணவர்கள் தமது ஐக்கியத்தை நினைவுபடுத்தும்படி ஒன்றுகூடிய போது, அதன் தலைவரான வண. பி. செல்மர் ஓ. எம். ஐ. சுவாமிஅவர்கள் பழைய மாணவரை வரவேற்றார். அன்று மத்தியானம் 11மணியளவில் விசேஷ பூசைப்பலி அவர்களுக்காக நிறைவேற்றப்பட்டது. மத்தியானம் 75பழைய மாணவர்களும் வண. கில்பேட் பெரோராசுவாமியாரைத் தலைமையாகக்கொண்டு விருந்தருந்தினர். அவர்களுடனே வயதுமுதிர்ந்த ஓர் பழையமாணவருமிருந்தார். அன்று மாலை வருடாந்த கழகவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. களுத்துறை மாவட்ட சிரேஷ்டகுருவாகிய அதிவண. கென்றி றொட்றிக்கோ சுவாமியவர்கள் பரிசில்வழங்கினார்.

சிரேஷ்டர் சுவாமியார் தமதுஉரையில், “இந்த ஸ்தாபனம் அநாதைப் பிள்ளைகள், மற்றும் பாதுகாப்பிலுள்ள பிள்ளைகளைப்பயிற்றுவதிலும், அவர்கள் முன்னேற்றத்துக்கும், எதிர்காலச் சீவியத்துக்கும் ஏற்றபயிற்சியளித்து வருகின்றது. இவ்வுண்மை, இங்கு குழுமியிருக்கும் பெருந்தொகையான பழையமாணவரால் தெளிவாகின்றது. இத்தாபனத்தால் தாம் அடைந்துகொண்டநன்மைகளுக்கு நன்றிகாட்டும் மனப்பான்மையுடன் அவர்கள் இங்கு சமூகமளித்துள்ளனர். இத்தாபனத்தைத் திறம்பட நடாத்தும் அதன்தலைவர், அவரது உதவியாளர், சககுருமார், சங். சகோதரர்கள் ஆகியோருக்கே இப்பெருமையுடையது. எவ்வித பாகுபாடும் பாராட்டாது, உடல்நலமும், உளநயமும், ஆன்மநலமும் குன்றாது கவனித்து வரும் சேவையே இதன்மேன்மைக்கு காரணமாம்” என்று கூறினார்.

பாப்பரசர் கீதமும், தேசீயகீதமும் பாடப்பட்டதுடன் விழா இனிதே முடிவெய்தியது.

### கொட்டாஞ்சேனையில் உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்கள் சபையின் அபார செபத்தொண்டு

கடந்த 40 வருடங்களாகக் கொட்டாஞ்சேனை ஆசனக்கோவிற்பங்கிலே இலைமறைகாய்போல், மறைவாகவும், எவ்விதவிளம்பரமோ, ஆடம்பரமோ இன்றி மிகவும் விரும்பத்தக்க, மதிப்புடையதோர் ஊழியம் நடைபெற்று வருகின்றது. இவ்வூழியம் இன்றைய நிலையைவிட அதிகம்பிரஸ்தாபமடைய வேண்டிய தொன்றாயினும் அவ்வாறாக அது இருக்கவில்லை. உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களை இரட்சிப்பதே இந்தக் கூட்டத்தாரின் ஒரேநோக்கமும், தாகமுமாகும். 1960-ம்ஆண்டுவரை இச்சபையானது பிரசித்தம்பெறவில்லை. 1960-இன் ஆண்டறிக்கை “அவர்களுக்கு எங்கள் செபங்கள் மோட்சகதவைத்திறந்துவிட்டன” என்று குறிப்பிடுகிறது. 1960-ம்ஆண்டிலே மரித்தோருக்காக இச்சபையினரால் 1,145பூசைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. இச்சபையில்ஆக 17அங்கத்தினரேஉளர். இதன் செயலாளர் திரு. பிலிப் சி. ஆனந்தப்பா, பொருளாளர் திரு. எட்வின் ஜே. பெரோரா.

### கண்டி விசாரணைப் பங்குமக்கள் தேவதாயின் மாசில்லாத இருதயத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டனர்

போராதனைவீதியில் இருதயநாயகியின் கவர்ச்சியான திருஉருவம் காண்பவர் எவரையும்கவரும். முழுஆள்உயரமான இச்சொரூபம், அண்மையில் கண்டி மேற்றிராணியாரான அதிவந். டக்றர் லேயோநாணயக்கார ஆண்டகைஅவர்களினால் ஆசீர்வதிக்கப்பட்டது. இவ்வைபவத்தின்போது கண்டி விசாரணைப்பங்கைத் தேவதாயின் மாசில்லாத இருதயத்துக்கு அர்ப்பணித்தார் மேற்றிராணியார்.

இதேசமயம் விசாரணைப்பங்குக் கிறிஸ்தவர்களின் குடும்பசெபமாலைப் பக்தியை இன்னும் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் கட்டனைச்சுவாமி அவர்கள் குடும்பசெபமாலைப்பக்தியில் உள்ளபிரமாணிக்கத்தைப் புதுப்பித்ததின் அடையாளமாக, மேற்றிராணி ஆண்டவரவர்களினால் ஆசீர்வதிக்கப்பட்ட செபமாலையை மாதாவின் திருக்கரங்களில் ஒப்படைத்தார். மேற்படி மாதாசொரூபம் கேற்றம்பியில் உள்ள ஒருவரால் உபகரிக்கப்பட்டது.

## கண்டியில் மரியாயின்சேனை மாநாடு

அண்மையில் கண்டி நகரிலே கண்டி மேற்றிராசனத்திலுள்ள மரியாயின் சேனைப்பிரசீடியங்களிலிருந்து 150 பிரதிநிதிகளும், இருமேற்றிராணிமாரும், சைனியங்களின் பதினொரு ஞானத்தலைவர்களும் மாநாடுகூடி, மரியாயின்சேனைபற்றிய பல்வேறுவிடயங்களை ஆராய்ந்தனர்.

மரியாயின்சேனையாரின் சுற்றுப்பிரகாரத்துடன் மாநாடு ஆரம்பமாயிற்று. ஒவ்வொருசேனையின் கொடியும் முன்செல்ல, கொடியைத்தொடர்ந்து சேனை உத்தியோகத்தினரும், ஞானத்தலைவர்களும் சேனைஅங்கத்தினரும் பின்னே அணிசெய்து, சென்றனர். இந்தச் சுற்றுப்பிரகாரத்தில் கண்டி மேற்றிராணியாரான அதிவந். டக்றர் லேயோநாணயக்காரா ஆண்டகை அவர்களும் கலந்துகொண்டார்கள். சுற்றுப்பிரகாரம் மேற்றிராசனக்கோவிலை அடைந்ததும் கண்டி மேற்றிராணியார் அவர்களால் திவ்வியபூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. பூசையின்போது சேனையின் சார்பாகச் சேனைத்தலைவர்கள் காணிக்கைகளைப்பீடத்துக்கு எடுத்துச்சென்றனர். மேற்றிராணியார் பூசையில் சிறந்தபிரசங்கம் நிகழ்த்தினார். பூசையின்பின் காலைப்போசனம்; அதன்பின், மாநாடு நடக்கவிருக்கும் மண்டபத்துக்கு மீண்டும் அணிவகுத்துச் சென்றனர் சேனையாளர். அங்கு குழுமியிருந்தோர் அனைவரையும் வரவேற்றார் கியூறியாத்தலைவர் சகோ. விக்ரர் ஏ. நாணயக்கார அவர்கள். பின்னர் மரியாயின்சேனை மாநாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி, சேனையின் வெக்சில்லத்தை (சின்னம்) நாட்டிவைக்கும்படி மேற்றிராணியாண்டவரவர்களை வேண்டவே, “வேனிக்கிறே யாற்றோர்” எனும் இஸ்பிரீத்துசாந்துவானவரின் பாடல்பாடப்பட்டு ஆண்டகை அவர்களினால் சேனைச்சின்னம் நாட்டிவைக்கப்பட்டது. அதன்மேல் ஆண்டகையவர்கள், சேனையின் அப்போஸ்தலத்துவம்பற்றி உரை நிகழ்த்தினார்கள்.

மேற்படி மாநாடு 4 கூட்டத்தொடர்களாக நடாத்தப்பட்டது. முதற்கூட்டத்தில் வண. டி. தியோபேன் விக்கிரமரெட்ண சுவாமியவர்கள் “சேனையின் பக்திக்குரிய ஒழுங்குமுறை” என்னும் விடயம்பற்றிப் பேசினார். இரண்டாவது கூட்டத்தில் அதிவண. டி. ஐ. வீபஸ், ஓ. எஸ். பி. சுவாமியவர்கள், சேனையின் இலட்சணங்களும், அவற்றையடைதற்குக் கையாளவேண்டிய வழிவகைகளையும்பற்றி உரைநிகழ்த்தினார். 3-வதுகூட்டத்தில், “சேனையின் வேலைகள்” என்னும் விடயம்பற்றி அதிவண. ஏ. போல் பெரோரா சுவாமி அவர்கள் பேசினார்கள். 4-வதுகூட்டத்தொடரில் இலங்கை சேனைத்துஸ் ஞானத்தலைவராகிய அதிவண. நேரியஸ் பெர்னாண்டோ சுவாமியவர்கள் “சேனையின் கிரமமுறை” என்னும்விடயம்பற்றிச் சொற்பெருக்காற்றினார். ஒவ்வொரு சொற்பொழிவின் பின்னும் பேசப்பட்டவிடயம் 25 நிமிடங்களுக்கு விரிவாக விவாதிக்கப்பட்டது. அங்கத்தவர்கள் விவாதத்தில்காட்டிய ஆர்வம் பாராட்டத்தக்கது. மதிய உணவின்பின் கண்டியின் முன்னாள் மேற்றிராணியாரும், தற்பொழுது பாகாய் மேற்றிராணியாருமான அதிவந். டக்றர் டி. பி. றெஞ்ஞோ ஆண்டகையவர்கள் மாலை 4-50மணியளவில் மேற்றிராசனக்கோவிலில் தெதேயும் தோத்திரக்கீதம்பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதமருளிச் சேனை மாநாட்டை முடித்துவைத்தார்.

### புதிய கன்னியாஸ்திரிக்கு வரவேற்பு

குருநாகலைச் சேர்ந்த கல்கமுவா எனும் கிராமத்தில் வசிக்கும் திரு. க. வஸ்தியாம்பிள்ளையினதும், ஸ்ரீமதி சூ. அன்னம்மாவினதும் பிரியபுதல்வியும், மாத்தளை அர்ச். மரியாயின் பிரான்சீஸ்கன்சபைச் சந்நியாசி சங். சகோதரர் பேணுட் அவர்களின் மூத்தசகோதரியுமான சங். சகோதரி நெயல்லீற்ற அவர்கள், மங்களூரிலுள்ள கார்மேல் கன்னியர்சபையின் தாய்மடத்தில் நவசந்நியாச வார்த்தைப்பாட்டை முடித்துக் கொண்டு தாய்நாட்டிற்குத் திரும்பியிருப்பதன் நிமித்தம் பொல்காவலைக் கன்னியர் மடத்தில் கடந்த

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## அவசரகாலநிலைமை

இலங்கையிலே அவசரகாலநிலைமை இன்னும்ஒருமாதகாலத்திற்கு நீடிக்கப்பட்டிருப்பதாய்ச் சென்றவியாழக்கிழமைஇரவு வெளியான "கெசற்"றிலே கவர்னர் – ஜெனறலால் செய்யப்பட்ட பிரகடனம்ஒன்று பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிறது.

## போஸ்ற்மாஸ்றர் – ஜெனறல்

போஸ்ற்மாஸ்றர் – ஜெனறல் திரு. எச். ஈ. செனவிரத்தின தம்முடைய பதவியிலிருந்து இளைப்பாறுவதற்காயத்தமாய்ச் சென்றவெள்ளிக்கிழமை விடுமுறையில் சென்றிருக்கின்றார். இவரிடமாக உதவிப்போஸ்ற்மாஸ்றர்–ஜெனறலான திரு. ரி. சிவப்பிரகாசம்அவர்கள் தற்காலிக போஸ்ற்மாஸ்றர்–ஜெனறலாக நியமனம்பெற்றுச் சென்றவியாழக்கிழமை பதவியேற்றிருக்கின்றார். தற்போது 52வயதுடையவரான இவர் 1936-ம்ஆண்டு தபாற்பகுதியில் சேர்ந்து, அதிலே கடந்த25வருடகாலமாகச் சேவையாற்றி வந்திருக்கின்றார். இவர் முன்னே 1958-ம்ஆண்டு தற்காலிக போஸ்ற்மாஸ்றர்–ஜெனறலாகக் கடமையாற்றியவர். யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரியிலும், பின்னர் கொழும்பு,றோயல்கல்லூரியிலும் இவர் கல்விபயின்றவர்.

## இளைப்பாறும் வயதுக்கட்டுப்பாடு

விஞ்ஞான, தொழில்நுட்ப துறைகளிலும், வைத்தியம், சட்டம்போன்ற தொழில்களிலும் ஈடுபட்டிருக்கும் அரசாங்க ஊழியர்களைத்தவிர, மற்றெந்த அரசாங்கஊழியரும் 55 வயதுக்குமேல் கடமையாற்றும்படியாக அவரின்சேவைகாலத்தை நீடிப்பதில்லையெனச் சென்றவைகாசிமாதம் 31-ந்திகதியன்று நடைபெற்ற மந்திரிசபைக்கூட்டத்திலே செய்யப்பட்ட முடிவைச் சென்றவியாழக்கிழமை நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டம் நீக்கிவிட்டிருக்கிறது. 55வயதுக்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்களைக் கட்டாயமாக இளைப்பாறச்செய்ய வேண்டுமென்று முன்னர்அரசாங்கஞ் செய்த முடிவாலே கலங்கிய சுமார் 4,000அரசாங்கஊழியர்களின் அங்கலாய்ப்பும், ஆட்சேபமும் இத்தால் ஒருவாறு நின்றன.

## புத்தசாசனக் கமிஷன் அறிக்கை

பயாகலையைச்சேர்ந்த புஷ்பாராமயாவில் நடைபெற்ற கூட்டம்ஒன்றிலே கனம். விமலசோதி தேரோ எனும் புத்தகுரு பேசியபோது: "தேசிய அபிவிருத்தியென்ற போர்வையின்கீழ் புத்தசங்கத்தினதும், புத்தகோவில்களினதும் சொத்துகளை அரசாங்கம் கொள்ளையிடப் பார்க்கின்றது; புத்தசாசனக் கமிஷனின்அறிக்கையிலே மதத்திற்குமாறான கம்யூனிஸத்தின் சாயல் படிந்திருக்கிறது; இலங்கையிலே புத்தசாசனத்தை அழிப்பதற்கானவித்துகள் கமிஷனின் சிபாரிசுகளிலே இருக்கின்றன"எனக் கூறலாயினர்.

## உத்தியோகப்பற்றற்ற நீதவான்

யாழ்ப்பாண நீதிப்பரிபாலனபகுதிக்கு யு. எம். எனப்படும் உத்தியோகப்பற்றில்லாத ஒருநீதவானாக வழக்கறிஞர் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஜே. பி. அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

## வறியமாணவரும் வசதிக்கட்டணமும்

வித்தியாதிபதியின் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளிலே வறுமைகாரணமாய் வசதிக்கட்டணம் செலுத்தமுடியாத வறியமாணவர்கள் பாடசாலை நூல்நிலையத்திற்குச் செல்லாமலும், விளையாட்டுகளில் பங்குபற்றாமலும் தடுத்து அவர்கள்மட்டிலே பாரபட்சம் காட்டப்படாதென்று அப்பாடசாலைகளின் தலைமையாசிரியர் களுக்கெல்லாம் கட்டளைபிறப்பிக்கப்பட்டுள்ளது.

## புதியடக்றர்மாருக்குக் கட்டுப்பாடு

அரசினர் வைத்தியகல்லூரியிலிருந்து அரங்கேறும் புதியடக்றர்மார் ஐந்துவருடகாலத்துக்குப் 10,000ரூபாபிணையிலே கைச்சாத்திட்டு வைத்தியசேவையில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று அரசாங்கம் முன்னர்செய்துள்ள முடிவைத் திரும்பவும் உறுதிப்படுத்தியுள்ளது. அரசாங்க வைத்தியஅதிகாரிகள்சங்கம் இந்தமுடிவைஎதிர்த்து முன்னர் ஆட்சேபித்திருந்தும் இருமுக்கியகாரணங்களையிட்டு—டக்றர்மாரின் போதாக்குறையை நிவிர்த்திசெய்வதும், வைத்தியசேவையில் சேர்ந்தவர்கள் அதினின்றும் விலகிப்போகாது தடுப்பதுமாகிய இருமுக்கிய காரணங்களையிட்டு அரசாங்கம் இந்தக் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தியுள்ளது.

## மூன்றுவது அவசரகாலச்சட்டம்

கொழும்பு மாநகரசபையின் கூட்டம்ஒன்று சென்ற12-ந்திகதி நடைபெற்றபோது, அவசரகாலநிலைமையை நீக்கிவிடவேண்டுமென்று பிரதமரைக் கேட்கும் பிரேரணைஒன்றைக் கொண்டுவந்துஒருவர்பேசுகையில்:1956-ம்ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முதன்முதலாக அதிகாரத்துக்குவந்தபின் இப்போதைய அவசரகாலநிலைமை மூன்றுவதாகும்; காலஞ்சென்ற பிரதமரின்காலத்திலே அவசரகாலநிலைமை ஆட்சி 29தினங்களாக நடைபெறலாயிற்று; தற்போதையஅரசாங்கம் 420நாட்கள்மாத்திரமே அதிகாரம் வகித்திருந்தும் 149தினங்களாக அவசரகாலநிலைமை ஆட்சி நடத்தியிருக்கிறது; அவசரகாலநிலைமையை மேலும்தொடர்ந்துவைத்திருப்பதானது இலங்கைப்பிரசைகளின் ஜனநாயகஉரிமைகளை வேண்டுமென்றேஅடக்கும் ஒருசெயலாயிருக்குமெனக் கூறலாயினர்.

## மக்கள்வங்கியின் புதியசேவை

மக்கள்வங்கியிலே அடகுபிடிக்கும் சேவை ஆரம்பிக்கப்பட விருக்கிறது. அதனால்பொதுமக்கள் அதிலே நகைகளை அடகுவைக்கமுடியும். எவரும் அதிலே தங்க,வெள்ளி நகைகளையோ, அன்றேல் அவற்றினால் செய்யப்பட்ட பொருட்களையோ அடகுவைத்து, வருடம்ஒன்றுக்கு எட்டுச்சதவிகித வட்டியுடன் ஆயிரம்ரூபாவரை வட்டிக்குப் பணம்பெற்றுக்கொள்ளலாம். அடகுவைக்கப்படும் பொருட்களின் 'மார்க்கெற்' பெறுமதியில் அரைவாசியே அடகுக்குக் கொடுக்கப்படும். அவ்விதம் கொடுபடும்பணத்தை ஒருவருடத்துள் எட்டுச்சதவிகிதவட்டியுடன் திரும்பக்கட்டிவிடவேண்டும். ஏற்கனவே மக்கள்வங்கியின் கிளைஸ்தாபனம் அடகுபிடிக்கும்சேவையை ஆரம்பித்துள்ளது. அடகுபிடிக்கும் பொருட்களின்பெறுமதியை மதிப்பதற்கென்று விசேடவிதமாகப்பயிற்றப்பட்ட அதிகாரிகளையும் மக்கள்வங்கி வேலைக்கமர்த்தியுள்ளது.

## பணிஸுக்கு அரைச்சதம்

இலங்கைப்பாடசாலைகளிலே 15லட்சம் பிள்ளைகளுக்கு இலவச மதியப்போசனமாகப் பணிஸும்,பாலும் கொடுக்கத் தற்போது அரசாங்கத்திற்குச் சுமார் 1கோடியே 10இலட்சம்ரூபா செலவாகிறது. 'கெயர்'ஸ்தாபனம் இலவசமாக வழங்கிவரும் கோதுமைமா தட்டுப்பாடாகும்போது பாண்போறணைகாரர் தாங்கள்கொடுத்துவரும் பணிஸுக்கு அரைச்சதவீதம் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரிலே அவ்வாறு கூட்டிக்கொடுக்கக் கல்விமந்திரி அரசாங்கத்தின்அனுமதியைக் கோரியிருக்கின்றார்.

## பாம்புகடிவைத்திய ஆஸ்பத்திரி

கொழும்பிலே கோட்டைப்பகுதியில் பொதுமக்களின் நன்கொடைகள் கொண்டு நடைபெற்றுவரும் திரு. எம். ஜி. ஏ. மொறுயிஸின் பாம்புகடி வைத்திய ஆஸ்பத்திரி கடந்தமூன்றுவருடம் ஒன்பதுமாதங்களிலும் பத்தாயிரம்பேருக்குச் சிகிச்சையளித்திருக்கிறது. பாம்புகடிவைத்தியநிபுணரான திரு. மொறுயிஸ் ஓர் அரசாங்க அச்சக ஊழியர். வேண்டியபோது சென்று அதில்சிகிச்சைசெய்ய அனுமதிக்கப்பெற்றுள்ளார். சமீபத்தில் புடையன்பாம்பு ஒன்றினால் கடியுண்ட திரு. பி. கே. ஆறுமுகம்என்பவர் இந்தஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று உயிர்தப்பினார். அதனால் இவர் கடமையாற்றிவந்த இங்கிலிஷ்–ஸ்கொட்டிஷ் கூட்டுறவு மொத்தவிற்பனவுச்சங்கம் அவரின் உயிரைக் காப்பாற்றியதற்காக நன்றி தெரிவித்து,திரு. மொறுயிஸின்சேவையைப்பாராட்டி இந்தஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக 500ரூபாவுக்குக் காசோலைஒன்று அனுப்பிவைத்துள்ளது.

## உள்நாட்டுப் பட்டதாரிகள்

அரசாங்கபாடசாலைகளிலும் வித்தியாதிபதியின் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளிலும் செய்யப்படும் ஆசிரியர்கள் நியமனங்களிலெல்லாம் இலங்கைச்சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கு முதலிலேஇடங்கொடுத்துத்தான் பிறநாட்டுச்சர்வகலாசாலைகளின் பட்டதாரிகளுக்கு இடம்கொடுக்கப்படவிருக்கிறது. இருவகைப்பாடசாலைகளிலும் புதியநியமனங்கள், இடமாற்றங்கள் பற்றியதிட்டத்தைஆராய்வதற்கெனச் சென்றவாரம்கூடிய கல்விஅதிகாரிகளின்மகாநாட்டிலே இவ்விதம் முடிவுசெய்யப் பட்டுள்ளது.

## வங்கிவிடுமுறைநாட்கள்

அடுத்துநிகழும் 1962-ம்ஆண்டிலே பின்வரும்தினங்கள் அரசாங்க வங்கிவிடுமுறைநாட்களாக இருக்கும். தை 19 (துருதுபௌர்ணமி). பங்குனி8 (ரம்ஸான்). சித்திரை20 (பெரியவெள்ளி). வைகாசி19(வெசாக்). புரட்டாசி26 (பண்டாரநாயக்கநினைவு தினம்). ஐப்பசி27(தீபாவளி). இவற்றுடன் ஆனி30-ந்திகதியும், மார்கழி 31-ந்திகதியும் விசேஷவங்கிவிடுமுறை நாட்களாகும்.

## கமிஷன் நியமிக்க வேண்டுகோள்

சதிமானமாகக் கொலையுண்ட முன்னாள்பிரதமர் பண்டாரநாயக்காவின் கொலைசம்பந்தமான அரசியல் அம்சங்கள்பற்றி விசாரணை நடத்துமாறு கமிஷன்ஒன்றை நியமிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்கும் பிரேரணைஒன்று கொழும்பு மாநகரசபையிலே ஏகமனதாக நிறைவேறியிருக்கின்றது.

## வெளிநாட்டுச் செய்திகள்

● பேர்லினில் தோன்றியுள்ள நெருக்கடியைச் சமாதானமுறையில் தீர்த்துக்கொள்ள அமெரிக்கா சகல முயற்சிகளையும் செய்யும்; ஆயினும் சோவியற்பிரதமர் குருஷேவைச் சந்திக்குமாறு நடுநிலைமைநாடுகள் விடுத்த கோரிக்கையைத் தாமஏற்க முடியாதென்று அமெரிக்கஜனாதிபதி கென்னடி சென்றசனிக்கிழமை தெரிவித்திருக்கின்றார்.

● இவ்வாரத்திலே தமதுவெளிநாட்டுமந்திரியைச்சந்தித்து ருஷிய வெளிநாட்டுமந்திரி குறோமிக்கோ நடத்தும்பேச்சானது சோவியற்ருஷியா உண்மையிலே சமாதானத்தை விரும்புகிறதாஎன்பதை எடுத்துக்காட்டலாமென்று அமெரிக்க ஜனாதிபதி இருபத்தைந்து நடுநிலைநாடுகளுக்கும் எழுதியுள்ள கடிதம்ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார்.

● அணுக்குண்டுபரீட்சைகளை நிறுத்திவைப்பதென்றிருந்த முடிவை ருஷியா மாற்றியிருக்கக்கூடாது; எவ்வளவுதான் தூண்டப்பட்டிருந்தாலும் அணுக்குண்டுப்பரீட்சைகளை நடத்துவதென்று அது முடிவுசெய்தது சரியல்ல; தானே ஒருகாரியத்தைச் செய்துகொண்டு பிறரைமட்டும் அவ்வாறு செய்யலாகாதென்று உபதேசம் செய்வது பயனற்றதென்று இந்திய பாதுகாப்புமந்திரி வீ. கே. கிருஷ்ணமேனன் கூறுகின்றார்.

● சோவியற்ருஷியா துருவப்பகுதியிலே பவனமண்டலத்தைத் தாக்கும்வகையிலே மற்றுமொரு அணுக்குண்டுப்பரீட்சையைச் சென்ற 16-ந்திகதியன்று நடத்தியிருப்பதாக அமெரிக்க அணுச்சக்திக்கமிஷன் செய்தியைவெளியிட்டிருக்கிறது. ருஷியாவெடித்த பதினொராவது அணுக்குண்டு இதுவாகும்.

● ருஷியா தனதுஅணுக்குண்டுப்பரீட்சைகளைத் தொடர்ந்துநடத்தத் தொடங்கியபின் அமெரிக்கஜனாதிபதியின் உத்தரவுப்படி அமெரிக்காவின் முதலாவது அணுக்குண்டுப்பரீட்சை நெவாடாபகுதியில் சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து தரைமட்டத்தின்கீழ் அப்பகுதியிலேயே அதன்இரண்டாவது அணுக்குண்டுப்பரீட்சை மறுநாள்சனிக்கிழமை நடைபெறலாயிற்று.

● பேர்லினிலே நான்குவல்லரசுகளுக்கும் இருந்துவரும் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய எந்தச்செயலையும் தனிப்பட்டமுறையிலே செய்யவேண்டாமெனச் ருஷியாவுக்கு மற்றுமொரு எச்சரிக்கையை மேற்கத்திய வல்லரசுகள் விடுத்திருக்கின்றன.

● பேர்லின்நகருக்குப் போய்த்திரும்பும்வழியிலே கிழக்குஜேர்மனியின் ஆகாயவெளிக்கூடாகச்சென்று எல்லைமீறும் எந்தப்போர்விமானமும் இனிமேல் குறிப்பிட்ட ஓரிடத்தில் இறங்கும்படி கேட்கப்பட்டு அவ்விதம் இறங்காவிட்டால் அது "றொக்கற்றுகள்உட்படச் சகல சாதனங்கள் கொண்டும் அழிக்கப்படு"மென்று ருஷியா மேற்கத்திய நாடுகளைச் சென்றஞாயிற்றுக்கிழமை எச்சரித்துள்ளது.

● சோவியற்ருஷியா சென்றஞாயிறன்று பன்னிரண்டாவது அணுக்குண்டுப்பரீட்சையை நடத்தியதாக அமெரிக்க அணுச்சக்திக் கமிஷன் அறிவித்திருக்கிறது. இந்தப் பரீட்சை மத்தியஆசியாவிலே செமிபலாற்னிஸ்க் எனுமிடத்தில் நடைபெறலாயிற்று. இந்தக்குண்டும் முந்திய பதினொன்றையும்போல நடுத்தரசக்திவாய்ந்ததென்று சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி
### புரட்டாசி மாதம்—1961

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | ஞா. | 2. | **பெந்தெக்கோஸ்தின்பின் 18-ம் ஞாயிறு** (வி. ம.) | ப. |
| 25 | தி. | | காலதினம் (ஞாயிறு பூசை) | ப. |
| 26 | செ. | ம. | காலதினம் (ஞாயிறுபூசை) (அர்ச். சிப்பிரியான், யுஸ்தீனம்மாள் ஞா.) | ப. |
| 27 | பு. | | அர்ச். கொஸ்மாஸ் தமியான் | சி. |
| 28 | வி. | | அர்ச். வென்செஸ்லாஸ் | சி. |
| 29 | வெ. | 1. | **அதிதூதரான அர்ச். மிக்கேலின் ஆலய அபிஷேகம்** (வி. ம) | வெ. |
| 30 | ச. | | அர்ச். எரோணிமுஸ் | வெ. |

சத்திய வேத
**பாதுகாவலன்**
1961-ம் ஆண்டு
புரட்டாசிமாதம்23 -ந் திகதி

## எமது இளைஞர்களின் எதிர்காலம்

"தமிழ்இளைஞர்கள் அரசாங்க உத்தியோகங்கள்மட்டில் கொண்டுள்ள மனோவாஞ்சையை மாற்றிக்கொள்ளக் காலம்இன்னும் கடந்துபோகவில்லை; அவர்களின் உத்தியோகத்துறை நாளுக்குநாள் குறுகிக்கொண்டுபோகிறது என்பதையும், அவர்களின் உத்தியோகபாதையில் அநேகதடைகள் குறுக்குமறுக்காக இடப்படுகின்றன என்பதையும் அவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமேயில்லை; அதனால் அவர்கள் கண்ணியமான முறையிலே தங்கள்வாழ்க்கைக்கெனப் பிழைக்குமுகமாக எதிலுமே கையிடுவதற்குத் தயாராயிருக்க வேண்டும்"என்று பழுத்தஅரசியல் ஞானியும், அனுபவம்படைத்தவருமான தமிழ்ப்பெரியார் ஒருவர் அன்று ஒருகல்லூரிப் பரிசளிப்புவிழாவிலே பெரிதும்அங்கலாய்ப்புடன் கூறியிருக்கின்றார். மற்றோர் தமிழ்அரசியல்வாதி விடுத்துள்ள அறிக்கைஒன்றிலே "வேலையற்றிருக்கும் கற்றவாலிபர்களான எண்ணற்றஇளைஞர்கள் ஆசிரியர்களாகவோ, அன்றேல் அரசாங்கசேவையில் இலிகிதர்களாகவோ பதவி கிடைக்குமென்ற ஆசையைக் கைவிட்டு வாழ்க்கைக்கான வருவாயைத்தேடும்வழிகளில் ஈடுபடவேண்டும்; கோழிவளர்ப்பு நல்ல வருமானம் அளிக்கக்கூடிய ஒரு தொழிலாகும்; எஸ். எஸ். சி.படித்த இளைஞர்கள் கோழிப்பண்ணைகளைச் சிறந்தமுறையிலே கூட்டுறவுஅடிப்படையில் நடாத்தினால், நிறைந்த வருமானம்கிடைக்கும்; கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கு வேண்டிய ஆரம்பமுதலீடும் அதிகம் தேவைப்படாது; எந்தஇளைஞனும் கோழிவளர்ப்பை அதிகம்இலாபகரமானமுறையில் நடத்தலாம்; மீன்பிடிதொழிலும் கற்றஇளைஞர்களுக்கேற்ற மற்றோர்இலாபகரமான தொழிலாகும்; வேலைசெய்வது இழுக்கென்ற குறுகியமனப்பான்மையை அறவேஒழித்துவிட்டு எமதுபகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திக்குமாக உழைக்கவேண்டியகாலம் வந்துவிட்டதென்பதைத் தமிழ் இளைஞர்கள் நன்குணரவேண்டும்" எனத் தெரிவித்திருக்கின்றார்.

இதுகாலவரை தமிழ்மக்கள் மலாய்நாட்டிலும், இலங்கை அரசாங்கசேவையிலும் உத்தியோகம்பார்ப்பதையே எதற்கும் நம்பியிருந்தார்கள். இன்றோ மலாய்நாட்டுக்குச் செல்லுகிறவர்கள் தொகையும், அரசாங்க உத்தியோகங்களில் ஈடுபடுகிறவர்கள்தொகையும் நாளுக்குநாள் குன்றிக்கொண்டு வருகின்றன. நாளாந்தவாழ்க்கைக்குத் தேவைப்படும் பலதுறைகளிலும் அரசாங்கசேவை விசாலிக்கப்பட்டுவருவதால் வியாபார, வர்த்தகதுறைகளிலும் வேலைகிடைக்கும் சந்தர்ப்பங்கள் குறைந்துகொண்டு வருகின்றன. ஆகவே வடக்கு—கிழக்கு மாகாணங்களில் கைத்தொழில், கமத்தொழில், மீன்பிடிதொழில் ஆதியவற்றில்தான் தமிழ்மக்களின் எதிர்கால சுபீட்சவாழ்வு தங்கியிருக்கிறதென்று சொல்லவேண்டியதில்லை

நாடுஇன்று பெரும்நெருக்கடியான ஒருநிலையில் இருக்கின்றது. எதிர்காலம் இருள்சூழ்ந்ததாய் இருக்கின்றது. தமிழர்கள் உத்தியோகங்களை நம்பியிருந்தகாலம் மலையேறிவிட்டது. வேலையில்லாத்திண்டாட்டம் நாளுக்குநாள் மலைபோல எழுகின்றது. ஆகவே, இந்தவேளை பாடசாலைப்படிப்பைமுடித்து வெளியேறும்தமிழ்இளைஞர்கள் அரசாங்க உத்தியோகம்தேடி அலைந்துதிரிவதைவிடுத்து— காலத்தைவிருதாவிலே கழிப்பதைவிடுத்துத் தங்களுடையவும், தமிழ்ச்சமுதாயத்தினுடையவும் எதிர்காலநலன்கருதித் தொழில்துறைகளில் தங்கள்கவனத்தைத் திருப்பவேண்டும். தொழிலின் மகத்துவத்தை நன்குணர்ந்து பல தொழில்களிலும் ஈடுபடவேண்டும். பளை, பரந்தன், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை போன்ற பகுதிகளிலே காணிகள் பெற்றுக் காடுகளைவெட்டிக் களனிகளாக்கும்பணியில் ஈடுபடமுன்வரவேண்டும். பணவசதிபடைத்தவர்கள் தமதுசமுதாயத்தின் நலன்கருதி ஆங்காங்கு புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்துக் கற்றவாலிபர்கள் பிழைக்க வழிகாட்டவேண்டும். இயற்கைஅன்னை கடலிலும், தரையிலுமாக அளிக்கும் பல்வேறுவளங்களைப் பயன்படுத்திக்கொள்ளாவிடின் தமிழர்கள் பொருளாதாரத்துறையிலே பின்தங்கியிருக்கவேண்டிய பரிதாபநிலை ஏற்படும்என்க.

---

### செப அப்போஸ்தலர்சபை
## வெளியீடு
### புரட்டாதி மாதம்

**பொதுக்கருத்து:** நேர்மையான அறிவுக்கும், திருச்சபையின் போதனைக்கும் ஒத்தவண்ணம்பொதுசனஅபிப்பிராயம் உருவாகும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போர் அந்தந்தமக்களின் நாகரீகத்தையும், கலாசாரத்தையும் பாதுகாத்து, அவற்றை விவேகத்துடன் விசுவாசபோதனைகளோடு இணைக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

* * *

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பா[illegible]பரசர் இம்மாதத்துக்கென நியமித்த க[illegible]த்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

---

### சிந்தனைக் கதிர்
**2**

இறைவன் பொன்னானகாலத்தை எமக்களித்ததேன்? சிறிது சிந்திப்பின் நமது இரட்சணியத்துக்குதவவே என்பதுதெளிவாகும். நாம் தீயசெயல்களில் ஈடுபடும்போது காலத்தை வீணாக்குகிறோம். பாவத்தால் ஆன்மா அசுசியடைந்தபின் எக்கருமத்தைச் செய்யினும் அது பயனற்றதாகின்றது.

ஒருவன் பாவநிலையில் இருக்கும் தருணத்தில், அவனை எவ்வளவு நல்லவனாகப் பிறர் கருதினாலும், அவன் எவ்வளவு கவனமாகத் தன் கருமங்களைச் செய்யினும் நித்தியத்தைப் பொறுத்தவரை அனைத்துமே விழலுக்கிறைத்த நீராகின்றது.

இறைவன் எம்மைப் படைத்தபோது நாம் என்றும் அருள்நிறைந்த நிலையில் விளங்கவேண்டுமென விரும்பினார். எனவே, நாம் தீயசெயல்களில் ஈடுபடத்தொடங்கும்போதே அவரால்வெறுக்கப்படும் நிலையை அடைகிறோம். அன்றிலிருந்து மீண்டும் எமதான்மா தூய்மையாகும் வரை இறைவனின் நேரத்தை வீணாகச் செலவிடுகிறவர்களாகிறோம்.

எமது மனக்கண்ணில் என்றும் நிலைநிறுத்தவேண்டிய தொன்றுண்டு. கழிந்துசெல்லும் ஒவ்வொருநிமிடமும் எமது யாத்திரையில் இறுதிக் கட்டத்தைத் துரிதமாக்குகின்றது. எமது காலத்தின் கடைசிநிமிடமும் மறையும்போது, எங்கள்நேரத்தை எங்ஙனம் செலவிட்டோம் என்ற கணக்கறிக்கை நித்தியத்தில் எம்மை வரவேற்கத் தயாராகின்றது.

(சா. பெ.)

# கத்தோலிக்க செய்திகள்

### திருச்சபை ஒற்றுமை
#### பிதாப்பிதா அத்தனகோறஸ்

கொன்ஸ்தாந்திநோப்பிள்ஸ் நகரின் பிதாப்பிதாவான அத்தனகோறஸ், திருச்சபையின் ஒற்றுமையை மிக விரும்புகின்றவர். சிறப்பாகக் கத்தோலிக்கரிடையேயும், கிரேக்க பிரிவினை மக்களிடையேயும ஒற்றுமை நிலவவேண்டிய அவசியத்தை அவர் எடுத்துரைத்துள்ளார்: "கத்தோலிக்கரும், கிரேக்க பிரிவினை மக்களுமாகிய இருசாராரும் ஒன்றே. இராயப்பரும், பெலவேந்திரரும் சகோதரர்கள். ஒருவர் றோமையில் ஆட்சிபுரிந்தார். மற்றவர் கிரேக்கநாட்டில் ஆட்சிபுரிந்தார். ஆகவே, நாமும் சகோதரர்போன்றே வாழவேண்டும், உழைக்கவேண்டும். காட்சியாகமம் கூறுவதுபோல் 'வாயில்கள் திறக்கப்பெற்றுவிட்டன; இனி அவற்றை அடைப்பவன் எவனுமில்லை' நாம் உள்நுழைதல்மட்டுமே தேவையாகஉள்ளது"என்று தம்மைப்பேட்டிகாணவந்த நான்கு கத்தோலிக்க குருமாணவர்களிடம் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது: "பாப்புவை நான் என் தனிநண்பர் என்றமுறையில் அறிவேன்; பாப்புவுக்கு நான் அளிக்கும் ஒரு தனி வேண்டுகோள் இதுதான். அவர் தம் கரங்களை அகல விரிக்கவேண்டும். பாப்புவை ஏற்றுக்கொள்ளும்முதல்மக்கள் நாங்களாகவே இருப்போம். திருச்சபையின் ஒற்றுமை அவர்தம் ஆட்சியில் அடையப்பெறுமேயாகில், உலக சரித்திரத்தில் மிகப்பெரும் பாப்புவாக இடம்பெறுவார். றோமைக்குச்சென்று, இதைப் பாப்புவிடம் தெரிவியுங்கள்."

* * *

### மார்ட்டின்டேல் கடினவியாதி

இன்றைய கத்தோலிக்க திருச்சபையின் பெரும் எழுத்தாளர்களில் ஒருவரான யேசுசபையைச்சேர்ந்த வண. சி. சி. மார்ட்டின்டேல் சுவாமிகள் கடின வியாதியுற்றிருக்கின்றார் அவர் உடல்நலம் பெற்றெழ அனைவரும் மன்றாடுவோமாக. சுவாமிகள் அண்மையில் தம் குருத்துவத்தின் பொன்னாளைக் கொண்டாடினார்.

* * *

### இந்திய ராஜ்ய சபாவிலே குடும்பக் கட்டுப்பாடுபற்றிப் பேச்சு

சென்ற ஆவணித்திங்கள் 30-ம் நாள் இந்திய ராஜ்பசபாவிலே 3-ம்ஐந்தாண்டுத்திட்டம்பற்றித் தாம்ஆற்றிய சொற்பொழிவில், திரு. தாமஸ் சீனுவாசன் அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக்குறித்துப் பின்வருமாறுகூறினார்: "குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்துபவர் நடுத்தரவகுப்பினரும், உயர்ந்த நடுத்தர வகுப்பினருமே; இன்றைய சமூகத்திற்கு இவ்வகுப்பினரின் பண்புகள்தான் பெருந்தேவை; ஆனால், இவ்வகுப்புத்தான் குடும்பத்திட்டத்தின் மூலம் மடியவிருக்கின்றது; ... திருமணம் ஒரு நிலைமை; ஆகவே, அதில் தன்னடக்கம் தேவை ... இந்திய நாட்டிலே குடும்பம் 'ஆஷ்ரமா' என்று கருதப்பட்டு வந்துள்ளது; 'ஆஷ்ரமா' ஓர் அறம்; நாட்டின்பொருளாதாரநிலையை உயர்த்தும் ஆர்வத்தில், ஒழுக்க முறையைச் சீர்குலைத்தல்ஆகாது."

* * *

### கத்தோலிக்க சர்வகலாசாலை மாணவருக்கு ஒருவிடுதிச்சாலை

ஆங்கில சர்வகலாசாலை யொன்றில் அதன் அதிகாரிகளின் அங்கீகாரம் பெற்றதும், நிர்வாகக்குழுவில் அதன் பிரதிநிதிகள் உறுப்பினராய்க் கொண்டதுமான கத்தோலிக்கமாணவர் இல்லமொன்று இம்மாதம் மான்செஸ்ரரில் ஆரம்பமாகும். 250,000பவுண் செலவில் அமைக்கப்பெற்ற இவ்வில்லம், 16-ம்நூற்றாண்டில் வசித்தவரும் மிஷனரிக்குருமார் பயிற்சிமடத்தை டுவேயில் நிறுவியவரும், (ஆங்கிலவேத சாட்சிகள்பலரைத்தந்த) கல்விவிருத்தியாளருமான கருதினால் அலென் போரால், அலென் மண்டபமென அழைக்கப்பெறும்.

சல்வோட் மேற்றிராசனத்தின் முயற்சியால் கட்டப்பெற்ற இவ்விடுதியில் கத்தோலிக்கமாணவர் விடுதிவசதி பெறுவராயினும் கத்தோலிக்கர் அல்லாதாருக்கும் இல்லச்சலுகைகளிருக்கும். 120மாணவர் தங்குவதற்கு வசதிகொண்ட இவ்விடுதியில் சிற்றாலயம், உணவுமண்டபம், அமைதி அறை, விளையாட்டுச்சாலையும் தொலைதரிசினி மாடமும் உண்டு. மான்செஸ்ரர் சர்வகலாசாலையில் இலக்கியவிரிவுரையாளராயிருக்கும் திரு.டெஸ்மன்—லிகி எம். ஏ. விடுதித் தலைவராவர்.

முற்காலத்திற்போல பல்கலைக்கழக மாணவர் ஒன்றாய்வசிக்க வசதிதரும் இவ்விடுதியில் கத்தோலிக்க மாணவர் கத்தோலிக்க சூழலில் உயர்தரக்கல்வியும், வாழ்க்கைப் பயிற்சியும் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. பிறசமய மாணவர் சிலருக்கு விடுதிவசதியளிப்பதுமன்றி, உயர்தரக்கல்வியில் திருச்சபைபற்றுள்ளது என்பதற்கோர் சான்றுமாகும். சர்வகலாசாலை அமைந்திருக்கும் வீதியிலேயே கட்டப்பெற்றிருக்கும் இவ்விடுதியில் மான்செஸ்ரர் சர்வகலாசாலை மாணவர் மாத்திரமே இடம்பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நாத்திகம்' ஆசிரியருக்கு அபராதம்

இந்துக்களுடையவும், கிறீஸ்துவர்களுடையவும் மதஉணர்ச்சிகளைப் புண்படுத்தும்விதத்தில் இரு செய்திகளை பிரசுரித்ததற்காக ரூபா 400 அபராதம் தமக்கு விதிக்கப்பட்டதை ஆட்சேபித்து 'நாத்திகம்' பத்திரிகை ஆசிரியர் பி. இராமசாமி அளித்த அப்பீல் மனுவைச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கே. வீராசாமி, இம்மாதம் 8-ம் தேதியன்று நிராகரித்தார்.

பேச்சுச் சுதந்திரம் அடிப்படை உரிமைதான். என்ருலும், மதங்களையும், மதஉணர்ச்சிகளையும் அவமானப்படுத்துவதற்கு இந்தச் சுதந்திரத்தை உபயோகிக்க முடியாதென்றும், துவேஷ உணர்ச்சியினுல் இந்தக் கட்டுரைகளைப் பிரசுரிக்கவில்லையென்று மனுதார் கூறியபோதிலும், கட்டுரைகளின்வாசகத்தையும், தலையங்கத்தையும் பார்த்தவுடனேயே அவைகளில் துவேஷஉணர்ச்சி வெளிப்படையாகத் தென்படுகிறது என்றும், மேலும் மனுதார் இத்தகைய குற்றம்புரிவது இது முதற்தடவையல்ல என்றும் நீதிபதி கூறி மனுவை நிராகரித்தார்.

இ. பி. கோ. 295—ஏ பிரிவின் கீழ் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

* * *

### புதுநிருபமும் அமெரிக்காவும்

21 பிரதிநிதிகள்கொண்ட சபையில் 20 பிரதிநிதிகளின் வாக்கைப் பெற்று, கிறிஸ்துவ சமூககொள்கைகளின் அடிப்படையில் முன்னேற்ற மசோதாவை நிர்ணயிக்க முன்வந்துள்ளன அமெரிக்க கண்டங்கள். தெரிந்தெடுக்கப்பெற்றுள்ள சில தனிக்கொள்கைகள் "அன்னையும் ஆசிரியையும்" என்னும் அண்மையில் வெளியான புது நிருபத்தின் போதனையைக் கொண்டுள்ளன.

* * *

### பொலீவியாவுக்குக் கத்தோலிக்கஉதவி

பொலீவியா நாட்டிலே முதற் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக மேன்மைதங்கிய கஷிங் ஆண்டகை அவர்கள் 5,00,000 டலர்கள் கொடுத்துஉதவுவதாக வாக்களித்துள்ளார். போஸ்றன்நகரின் அதிமேற்றிராணியாரான இக்கருதினுல் ஆண்டகை அண்மையில் பொலீவியாவில் நடந்த நற்கருணை மாநாட்டிற்குப் பாப்புவின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார்.

* * *

### கினியா அதிமேற்றிராணியார் வெளியேற்றப்பட்டார்

சுதந்திரநாட்டிலே பேச்சுச் சுதந்திரமில்லை; எழுத்துச் சுதந்திரமில்லை. அதிமேற்றிராணி ஆண்டகை நாட்டினின்று வெளியேற்றப்பட்டுள்ளார். கினியாத்தலைவர் செகுதுரே, கத்தோலிக்கபள்ளிகளை விழுங்க முனைந்துநிற்கின்ருர். அதை எதிர்த்தார் பேரருட் பெருந்தகை ஜெருட் டெ மில்வில். "அரசினரை எதிர்த்த" குற்றம் சாட்டப்பெற்று நாட்டினின்று வெளியேற்றப்பட்டார்.

* * *

### பேர்ளினுக்குப் பிரியாவிடை

முன்னுள் பேர்ளின் மேற்றிராணியாரான மேன்மைதங்கிய கருதினுல் டெப்னர் ஆண்டகை சென்ற ஆவணித் திங்கள் 20-ம் நாள் பேர்ளினுக்குப் பிரியாவிடை கூறிச்சென்ருர். அன்று அவர் ஆடம்பரதிருப்பலி நிறைவேற்றி, தம் பிரிவுபசாரப் பேச்சில் "கிழக்குப் பேர்ளினைச்சுற்றிக்கிடக்கும் முள்வேலி பேர்ளின் மேற்றிராசனத்தின் ஒற்றுமையை வெகுவாய்க் குலைக்கின்றது; கத்தோலிக்க மக்களாகிய நாம் இத்தடைகளையும், முள்வேலிகளையும் அன்பெனும் ஆயுதம் தாங்கி அறுத்தெறிவோம்; முட்கம்பிகளால் வளைக்கப்பட்டுத் துன்புறும் நம் சோதரருக்காக இறைவனை மன்ருடுவோம்; பேர்ளின் ஒற்றுமைபெறவும், உலகில் சமாதானம் நிலவவும் வேண்டிக்கொள்வோம்; பேர்ளினைவிட்டுப் போகின்றேன்; ஆனுல், அன்பினுலும், உதவியாலும் அதோடு என்றும ஒன்றித்திருப்பேன்; சிலுவையின் பாரத்தைத் தாங்கிநிற்கும் பேர்ளினை மறவேன்; இனி மியூனிக்கும், பேர்ளினும் ஒன்றே" என்ருர்.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 30-ந்தேதி நடைபெருமல் அர்ச். பிரான்சீஸ்குவின் திருநாளாகிய ஐப்பசிமாதம் 4-ந்தேதி பி. ப. 4மணிபளவில் நடைபெறும். அவ்வமயம் மூன்றுஅங்கத்தவர்கள் தமது நவாப்பியாசகாலத்தைத் தொடங்குவார்கள்.

இங்ஙனம்,
A S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3699**

வளலாய்
கணவதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
— வழக்காளி.
எதிராக, வளலாய்
தம்பையா சுப்பிரமணியம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3699-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1961-ம்ஆண்டு ஐப்பசிமீ 14-ந்உ (14-10-61) சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 616/13-ம் இதற்குத்தீர்வை ரூபா 400-க்குப் 13-10-60 திகதிதொடக்கம், 11-1-61 திகதிவரைக்கும் 100-க்கு 6வீத வட்டியும் பின்பு முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 132ரூபா 90சதமும். இதில் ரூபா 50 கொடுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வட்மாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்கிழக்கு அச்சுவேலிகோயிற்பற்று, வளலாய்இறை "மாவடி" பரப்பு நிலலாச்சம் 36. எல்லை: கிழக்கு — சுப்பிரமணியம் பெண் செல்லம்மாவுக்கும், கதிர்காமர் கந்தையாவுக்குமுரிய காணி. வடக்கு — தம்பையா சுப்பிரமணியத்துக்கும், சகோதரங்களுக்கும் உரியகாணி. மேற்கு — நடராசா பெண் பொன்னம்மாவின் உரித்தாளருக்குரிய காணி. தெற்கு — சிதம்பரப்பிள்ளை ஆறுமுகத்திற்குரிய காணி. இது அடங்கலில் சொரியலாய் $\frac{1}{3}$பங்கும், மேற்கெல்லைக் காணியில்இருக்கும் கிணற்றில்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், தீர்வையில்நிற்கும் 3தென்னைகளும்.

2. ஷை இறை "தங்கியவளை" பரப்பு நிலலாச்சம் 64-ம், கிணறும். எல்லை: கிழக்கு, வடக்கு — வல்லிபுரம் முதலித்தம்பிக்கும், மறுபேருக்குமுரிய காணிகள். மேற்கு — தம்பையா சுப்பிரமணியத்துக்கும், முத்துப்பிள்ளை வேதநாயகத்திற்கும், மறுபேருக்குமுரிய காணிகள். தெற்கு — சிதம்பரப்பிள்ளை முத்துப்பிள்ளைக்கும், மறுபேருக்குமுரிய காணிகள். இதில் சொரியலாய் $\frac{1}{16}$பங்கும், அதைச் சேர்ந்தவைகளும்.

3. ஷை இறை "குக்குறுப்பான்" பரப்பு நிலலாச்சம் 36-ம், பனைகளும். எல்லை: கிழக்கு — குமாரவேலு காசிப்பிள்ளைக்கும், மறுபேருக்கும் உரியகாணிகள். வடக்கு — அம்பலவாணர் பெண் நாகப்பிள்ளைக்கும், மறுபேருக்குமுரிய காணிகள். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — பொன்னையா பெண் சின்னுச்சிக்கும், பங்காளருக்குமுரிய காணிகள். இது அடங்கலில் சொரியலாய் இருபதில் மூன்றுபங்கும், அதைச்சேர்ந்தவைகளும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
விதானைவளவு, சித்தன்கேணி,
9-9-61.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3386**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

கரையூர்
கைதம்பிள்ளையின்மகள் மரியாப்பிள்ளை
— வழக்காளி
எதிராக
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
ஐயுரம்பிள்ளை செல்வரெத்தினம்
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3386ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனம் 1961 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை (28-10-1961) பிற்பகல் 2மணி தொடக்கம் அக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**

முதல்வட்டிரூபா 3,075உம், 24-5-60 தொடக்கம் 2-8-60 வரைக்கும் ரூபா 2,500-க்கும் 12% வட்டியும், அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும். ஏற்பட்ட செலவு 148 ரூபா வெலியாத்துச் செலவு 41ரூபா 82சதம். வரும்செலவு 30ரூபா. இதில் 125 ரூபா கழிவு.

### ஆதன அடர்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், சுண்டிக்குளிக் கோயிற்பற்று, சுண்டிக்குளி இறை "முதலைக்குளமும், முதலைக்குள வயலும்" என்னும் காணி 7பரப்பும், 8-ம் $\frac{1}{1}\frac{1}{2}$ குளியும், அதில் 7 பரப்பு நெற்காணியும் உண்டு. (7 Lms. P. C. and 8, $\frac{11}{12}$ Kls.) இதில்2 பரப்பும், 4குளியும் செய்பயிர், வான்பயிரும். இந்தக் காணிக்கு வழி தெற்குப்பக்கத்தில் 4 அடி அகலத்தில் உண்டு. மிகுதியில் 2 பரப்பு செய்பயிர், வான்பயிரும், 16, $\frac{11}{12}$ குளியின் மேற்குப்பகுதியில் வீடும், கிணறும், தென்னைமரமும், வேறு தானுய் உண்டான பயிரும் உண்டு. எல்லை: கிழக்கு—சைமனின்மனைவி அன்னம்மா. வடக்கு—ஆறுமுகம் கணவதிப்பிள்ளையின் மனைவி கனகம்மா. மேற்கு — கை ஒழுங்கை. தெற்கு — 4அடி அகல ஒழுங்கை. இக்காணி யாழ்ப்பாணம் காணிப்பதிவுக் கந்தோரில் D. 260/237ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இ. கனகரத்தினம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைரேட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

என் நேசத்தாயே! சதாசகாய நாயகியே! எனக்கு எத்தனையோ உதவிகளைப் புரிந்தீர் அதற்கு எனது மனமார்ந்த நன்றி. எனது பிள்ளையின் வருத்தத்தைக் குணமாக்கும்படி உம்மிடம் இரந்துகேட்டேன். நீர் இப்போது எவ்வளவோ சுகத்தைத் தந்திருக்கிறீர். வியாதியைப் பூரணமாக்குவீரென நம்பிச் சதாகாலமும் நன்றி கூறுகிறேன்.

— ஓர் அடியாள்.

### நன்றி ஸ்துதி

திவ்விய சற்பிரசாதநாதரின் கருணையாலும், வரப்பிரசாத ஊறணியாகிய பரி. சதாசகாயமாதாவின் இரக்கத்தாலும், கைவிடப்பட்ட நிலையினருக்கு உதவும் அர்ச். யூதா ததேயு, இக்கட்டுஇடைஞ்சல்களில் இன்னல்களைத் தீர்க்கும் முத். மாட்டின் டி போறஸ், அந்திய வேளையிலும், அவசரமான தருணங்களிலும் ஆறுதல் செய்யும் அர்ச். எக்ஸ் பெதித்து இவர்களின் மன்ருட்டாலும், என் பிள்ளைக்கு நடந்த சத்திரசிகிச்சை குணமானது. இன்னும் எனக்கு வரும் துன்பங்களில் இரங்கும்படி இவர்களை வெகு தாழ்மையாய் இரந்து கேட்கும்,

அடியாள், மேரி.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## மேற்றிராசனங்கள் தரும் செய்தி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

26-8-61 சனிக்கிழமை பரிமளிப்பான வரவேற்புபசாரமொன்று அளிக்கப்பட்டது. கண்கொள்ளாக் காட்சியாக அலங்கரிக்கப்பட்டிருந்த கன்னியர் மடத்தில் சந்நியாசிகளும், கன்னியாஸ்திரிகளும், பெற்ருர், உற்ருர், இனசனபந்துக்களுமாக அன்றுதினம் பலஊர்களிலிருந்தும் அநேகர்வந்துகுழுமினர். வண. லான்சா சுவாமியாரால் பாடற்பூசை நிறைவேற்றப்பட்டபின் பரிமளிப்பான விருந்துபசாரணைகளுடன் வைபவம் இனிதே முடிவடைந்தது.

### மாருவிலில் திருச்செபமாலைச் சமாகமம்

அண்மையில் மாருவிலில் கொறகல்ல கிராமத்திலுள்ள பாலைவனமாய்க்காட்சிதரும் மணற்பரப்பிலே கோவில்கொண்டிருக்கும் புனிதபத்தாம் பத்திநாதரின் திருநாளை முன்னிட்டும், அதேதினத்தில் ஏற்பாடாயிருந்த பரிசுத்த செபமாலைச் சமாகமத்தை முன்னிட்டும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு திரண்டுநின்றனர். கம்பகா புனித யூதா ததேயுவின் ஆலயக்கட்டளைக்குரவர் வண. விக்ரர் சுவாமியவர்கள் 10 நாட்களாக ஞானவொடுக்கப் போதகஞ்செய்தார்.

மாருவில் திருக்குடும்பக் கன்னியர் பெண்பாடசாலைப்பிள்ளைகள் செபமாலை போல் வளைந்துநின்றகாட்சி எவரையும் கவர்ந்தது. திருச்செபமாலைச் சமாகமத்துக்குச் சிலாபமேற்றிராணியாரான அதிவந் டக்றர் எட்மன்ட்பீரிஸ் ஆண்டகையவர்கள் தலைமைவகித்தார். ஆண்டவரவர்கள் திருச்செபமாலையைப்பற்றி விளக்கியதுடன் கத்தோலிக்க குடும்பங்களுக்கும், உலகம்முழுவதற்கும் அமைதியும் சமாதானமும் ஏற்படக் குடும்பசெபமாலை எவ்வாறு ஓதப்படவேண்டுமென்பதையும் எடுத்துரைத்தார்.

திருச்செபமாலையின் 5காரணிக்கங்கள் பாடசாலை மாணவிகளினுல் நடித்துக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து 5காரணிக்கங்கள் ஓதப்பட்டன. சமாகமமுடிவில் பத்திமாபதிக்காட்சிகளின் ஒருசிறுபகுதி நடித்துக்காட்டப்பட்டது. இச்சிறுநாடகத்தைக் கண்காணித்தவர் சங். தாயார் லோயுலா அவர்களே. திருக்குடும்பக்கன்னியரும், ஆசிரியைகளும் நாடகத்தை அரங்கேற்ற உதவிசெய்தனர். மாதம்பை பெண்சாரணர்கள் சனக்கூட்டத்தை அமைதியாகவும், ஒழுங்காகவும் இருக்கும்படி பார்த்துக்கொண்டனர்.

## உல்லாச வேளை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

குப்பணிந்தவாறும் நடந்துகொள்வது நம் கத்தோலிக்க மறைக்கே ஒரு பெருமையல்லவா?

அன்ரன்: எல்லாம் சரிதான். சின்னத்தானின் விகிதத்தை வைத்துக்கொண்டு கூத்தடிக்கிருளே சின்னக்கா. அதையும் கொஞ்சம் கவனிக்கக் கூடாதா?

அகஸ்ரின்: என்ன ஆஞ்சலா, உன் கணவர் எங்களுக்கும் ஏதும் எழுதியிருக்கிருரா?

ஆஞ்சலா: ஆமாம், சென்ற வார இறுதியில் யூனிவேர்ஸ் பத்திரிகைக் காரியாலயத்துக்குப் போயிருந்தாராம், அதைப்பற்றி விபரமாக எழுதியிருக்கிருர்.

பெரியண்ண: யூனிவெர்ஸ் உலகிலேயே மிகப பெரிய கத்தோலிக்க வாரப்பத்திரிகை. 10 இலட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகள் வாரந்தோறும வெளியிடப்படுகின்றன. அப்பத்திரிகை பற்றிய சம்பவங்கள் வாசிக்க ருசிகரமானவையாகத்தானிருக்கும்.

அம்மா: உங்களுக்குள் ஒருமுறை போட்டுக்கொண்டு ஒவ்வொருவரும வாசித்துத் தள்ளுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## அன்புமிக்க இளைஞர்களே!

திருமறைத்தொண்டில் ஆர்வங்கொண்டுள்ள நீங்கள் விழித்தெழுதல் அவசியம். உங்கள்தொண்டின் மகத்துவத்தைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். சாத்தானுக்கு எதிராகப் போர்தொடுத்து, அவனை ஆத்துமங்களிலிருந்து விரட்டியடித்துக் கிறிஸ்துநாதரின் அரசாட்சியை அங்கு நிலைநாட்டுவதுதான் உங்கள் திருப்பணியின் உன்னத இலட்சியம். இத்திருத்தொண்டில் நீங்கள் வெற்றி பெற வேண்டுமாயின் சாத்தானைத் தோற்கடித்த ஒருவர் உங்களுக்கு முன்னோடியாகவும், துணைவராகவும் இருக்கவேண்டும். அவருடைய உதவியை நீங்கள் எப்போதும் நாடவேண்டும். அவர் யார் தெரியுமா? அவர்தான் அர்ச். மிக்கேல் அதிதூதன். சேவாவீரர்களின் பரலோக பாதுகாவலர். அவருடைய திருநாள் இம்மாதம் 29-ந்திகதி கொண்டாடப்படுகின்றது. அன்றுதினம் அவருடைய சலுகையை விசேஷவிதமாக வேண்டி, சாத்தானைத் தோற்கடிக்கும் பணியில் தீவிரமாய் உழைத்துவர உறுதிகொள்ளுங்கள். "தேவனுக்கு ஒப்பானவர் யார்?" என்றதே உங்கள் விருதுமொழியாகவும் இருக்கட்டும்.

ஞானப்பிதா

# வாலிபனே! எழுந்திரு

அன்று யேசுநாதர் நயீம்பட்டணத்துக்குப் போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. தமது சீஷரும், சனத்திரளும் பின்தொடரப் பட்டணத்தை நோக்கிவந்தார். அவர்கள் பட்டணத்து வாசலுக்குச் சமீபமாக வருகையில் துக்ககரமான ஊர்வலம் ஒன்று தென்பட்டது. பின்னர் துக்ககரமான வாத்தியகோஷமும் கேட்டது. ஒருபாடையும், அதன்மேல் ஒரு வாலிபனுடைய பிரேதமும் வந்தது. பின்னால் சனக்கூட்டம்; அவ்வாலிபனின் தாயும்வந்தாள். தாயின் ஒரே மகன்; அவளோ விதவை. இவற்றை எல்லாம் எண்ணியபோது அவருக்கு அவள்மேல் இரக்கம் ஏற்பட்டது. ஆம், அது உண்மைஇரக்கம்தான். அவளைக் காப்பாற்றவேண்டியவன், உலகின் வருங்கால கட்டிளங்காளை என்றெல்லாம் சிந்தித்தார். அவளை அணுகி, "அழவேண்டாம்" என்று சொல்லி, பாடையை நெருங்கி அதைத்தொட்டார். அதைச் சுமந்தவர்களோ நின்றார்கள். அப்பொழுது அவர்: "வாலிபனே! உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திரு" என்றார். உடனே இறந்தவன் எழுந்தான்.

இவ்வார்த்தைகள் அன்றோடுமுடியவில்லை. இன்றும் கூறப்பட்டே வருகின்றன. வாலிபனே! எழுந்திரு; சற்றுச் சிந்தி. அந்தோ! கொம்யூனிஸ்தரின் கொடுமையில் சிக்கித் தமது தாயாகிய திருச்சபைக்குத் துரோகம்செய்யும் வாலிபர் எத்தனை பேர்! அவர்கள் பசப்புப்பேச்சிலே மதிமயங்கி இருப்பவர்கள் எத்தனை பேர்! அப்பப்பா! மண்ணைப் பொன்னாக்குவோம், மரத்தை இரும்பாக்குவோம், நாட்டில் பாலும், தேனும் வழிந்தோடச் செய்வோம், வாரீர்! வாரீர்!! வாலிபரே!!! என்று வாலிபரை வருந்தியழைக்கின்றது கொம்யூனிசம். இதெல்லாம் ஏன்? வருங்கால உலகின் வச்சிரத்தூண்களாய் இருப்பவர்கள் வாலிபர்என்று அவர்கள் அறிவார்கள். எமது தாயாகிய திருச்சபை வாலிபராகிய எமது உதவியையே நாடிநிற்கின்றது. உயரத்தில் இருக்கும் வெளிச்சத்தைப் போலவும், கற்பாறையின்மேற் கட்டப்பட்ட வீட்டைப்போலவும், விலையேறப்பெற்ற முத்தைப்போலவும் இருக்கவேண்டியவர்கள் வாலிபராகிய நாமே.

இந்நேரத்தில் மீண்டும் ஒருமுறை நயீம்பட்டணத்துக்குப் போவோம். "வாலிபனே ......... எழுந்திரு" இவ் வாக்கியங்கள் அன்று மட்டுமல்ல, இன்றும், என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும். ஆகவே, இவ்வாக்கியங்களைக் கேட்டவுடன் நயீம்பட்டண வாலிபன் எழுந்ததுபோல் நாமும் எழுவோம். நாமும் நமது மாதாவாகிய திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறோம். அவளின் நன்மைக்காகவே எல்லாவற்றையும் செய்து அவளுக்காகவே சீவிப்போமாக.

வாழ்க! வாலிபர் குலம்.

இ. பேர்னுட்

# "எமக்கு நீதியும் நியாயமும் கிடைக்கட்டும்"

**கத்தோலிக்க பிரசைகள் முன்னணியின் ஹுணுபொக்குணக்கிளை மதகுருமாருக்கு அரசாங்கம் விதித்துள்ள விசாவரியை ஆட்சேபித்துப் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளது.**

பிறநாட்டு மதகுருமார், துறவிகள் ஆகியோர் இலங்கைக்குவந்து கத்தோலிக்க மதவழிபாடு, வேதப்பரப்புல்த முதலியனவற்றில் ஈடுபடும்பட்சத்தில் அவர்களது தற்காலிகவரியை அறவிடக்கூடாதென இலங்கை அரசாங்கத்திற்கு மேற்றிராணிமார் ஓர்வேண்டுகோள்விடுத்தனர். இதற்கு, "பிறநாட்டு மதகுருமார், துறவிகள் ஆகியோரைத் தற்காலிக வாசவரிசெலுத்துவதிலிருந்து விலக்கமுடியாது. தேவைப்படின், மற்றைய தேவாலய பொதுவிடயங்களுக்கு நிதிதிரட்டுதல்போல் இதற்கும் நிதிதிரட்டி வரியைச் செலுத்தலாம் என அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது" என்று பிரதமமந்திரி அவர்கள் கூறியுள்ளார்கள்.

இத்தீர்மானம் மதஉரிமை, உள்நாட்டுப் பிறநாட்டுத் தனிநபர்களது சுயாதீனம், சுதந்திரம் ஆதியனவற்றிற்குத் தேவையான பாதுகாப்பும், உற்சாகமும் அளிப்போம்என வாக்குறுதி அளித்திருக்கும் ஓர் அரசாங்கத்தின் தீர்மானம். இதுகத்தோலிக்க திருச்சபையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட ஓர் பயங்கரத் தீர்மானமன்றி வேறொன்றில்லை.

தங்களது ஆட்சிக்குட்பட்டிருக்கும் பிறநாட்டு மதகுருமாருக்கு, சனநாயகமுறையைப் பாதுகாப்பதற்கென்றே உருவான ஓர் அரசாங்கம் அளிக்கும்சலுகைஇதுதானா? எமது பாடசாலைகளைக் கைப்பற்றியதன் மூலமாகவும், வணக்கத்திற்குரிய றெஞ்சன்சுவாமியார் அவர்களின் தற்காலிக வாசஉத்தரவை வாபஸ் வாங்கியதன்மூலமாகவும், பிறநாட்டு மதகுருமார், கன்னியாஸ்திரிமார்மீது அவர்களின் மதச்சேவைக்காக அறவிடப்படும் இந்த அநியாயமான வரி மூலமாகவும் கத்தோலிக்க மதத்தை இலங்கையில் வேரறுத்துத் திருச்சபையை அழிக்கவேண்டுமென்று உறுதிபூண்டுள்ளோர் படிப்படியாகக் கத்தோலிக்க மதத்தவர்களின் சுதந்திரத்திற்கெதிராகச் செயலாற்றி வருகின்றனர்.

எனது மதச்சுதந்திரத்திற்கு இந்த அநீதியானவரி முரணாகிறது. உள்நாட்டு மதபோதகர்கள் போதாமையால், எமது ஞானதேவைகளைப் பூர்த்திசெய்ய இப்போதகர்கள் தங்கள் வீடுவாசல்களைத்துறந்து— தாய்நாடுகளைவிட்டு மதசேவைஒன்றையே தலைமேற்கொண்டு இங்கே வந்துள்ளார்கள்.

இந்தச் சூழ்நிலையில், இந்த அநீதியான வரியைச்செலுத்தும் பொருட்டு, மனம்வருந்தாமல் எங்கள் மதத்தின்பொருட்டு எம்மால் ஆனதைக் கொடுப்போமாக! 1960/61, 1961/62 ஆகிய வருடங்கட்கு ரூபா 800 தேவைப்படுகின்றன. எமது திருச்சபையின் சக்தியைச் சோதிப்பதாக இருக்கும் இந்நேரத்தில் நாம் மனம் தளராது இருப்போமாக! இப்படியான சேவைகளால் எமது திருச்சபை வலுவடையும்.

உயிர்துறக்க நேரிட்டாலும் கத்தோலிக்கராகியநாம் நமது மதசுதந்திரத்தைத் தானம்பண்ண மாட்டோம். அப்படித் தானம்பண்ணவும் கூடாது. நாம் கத்தோலிக்கராக இருப்பதால்எமதுபிறப்புரிமை மடிந்துவிட மாட்டாது.

நாம் கருணைக்காகக் கரம்நீட்டவில்லை. சட்டப்படி எமக்குக் கிடைக்கவேண்டிய நீதியும், நியாயமும் கிடைக்கவேண்டுமென வற்புறுத்துகிறோம்.

## நன்றித் துதி

வழுக்கிவிழுந்ததினால் முழங்காலில் ஏற்பட்ட பிசகுகாரணமாகக் காலை நீட்ட மடக்க முடியாமலிருந்து, அதற்காகச் செய்த சிகிச்சைகளெல்லாம் வீணாகி மனம் உடைந்துபோய்க் கடைசியாக அண்டினோரை ஆதரிக்கும் சகாயமாதாவின் பேரில் முழுநம்பிக்கைவைத்துக் காலுக்கு வைத்தியம் செய்ததின்பேரில் எதிர்பார்த்ததற்கு மேலதிகமாகச் சுகம் கிடைத்து, ஒருவருடகாலமாக மடக்கமுடியாமலிருந்தகாலை நீட்டி மடக்கி மனநிம்மதியுடனிருந்துவருகிறேன். எனது காலுக்குப் பூரண சுகத்தைத் தந்தருளிய இரக்கம் நிறைந்த சகாயமாதாவுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

கண்டி [illegible]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3571

அச்சுவேலி வடக்கு

1. விசுவலிங்கம் சின்னத்துரையும்,
2. பெண் சிவபாக்கியமும்

— வழக்காளிகள்

எதிராக

புத்தூர் மேற்கு

1. கந்தப்பிள்ளை அப்புத்துரையும்,
2. பெண் நாகரெத்தினமும்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3571-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1961-ம் வருடம் ஐப்பசிமாதம் 21-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 6,705/-ம், 25-8-60 தொடக்கம் 13-12-60 வரைக்கும் ரூபா 6,000/-த்துக்குப் 10 வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு 291 ரூபா 38 சதமும். இக் கோட்டுச் செலவில் ரூபா 175/- கொடுபட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி, புத்தூர்க் கோயிற்பற்று ஆவரங்கால் இறை "வேலருவன்கூடல்" பர. நில. இலா. 13½. இதற்கு எல்லை: கிழக்கு—பரமு தாமோதரம்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு—சரவணை பெண் கதிராசிக்குரியஆதனம். மேற்கு—கோணர் கதிரேசுக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். தெற்கு — கனகசபாபதி சுந்தரமூர்த்திக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். இதிடங்களும், வடமேற்குப் பக்கத்திலுள்ள கிணற்றில் இக்காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும், வழமையான வழி வாய்க்காற் பாவிப்புரித்தும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
16 A, அம்மன் றோட்,
[illegible], யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3384

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், கரையூர்

1. இன்னாசி கிறசந்துவும்
2. பெண் சிசிலியாவும்

— வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம், கரையூர்

1. சந்தியாப்பிள்ளை சவிரிமுத்துவும்
2. பெண் மரியம்மாவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3384-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1961-ம் ஆண்டு கார்த்திகை மீ 11-ம் உ (11-11-61) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,565/. இன்னும் ரூபா 2,000-த்திற்கு 24-5-60 தொடக்கம், 29-8-60 வரையும் 100-க்குப் 12%வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 195 ரூபா 85 சதமும். கோட்டுச்செலவால் ரூபா 125 கொடுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிகோயிற்பற்று, கரையூர்இறை "அரியதுரையன்தறை" பர. நில. இலா. 1, குளி $2\frac{1}{8}$-ம், வீட்டில் கிழக்கு அறைமுழுதும், செய்பயிர், வான்பயிர்களும், மேற்கெல்லைக் காணியில்இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்பும். எல்லை: கிழக்கு — றோட்டு. வடக்கு — வி. அருளப்பு இராசேந்திராவின் ஆதனம். மேற்கு — சுவாம் சுபதேசுவும், பெண் மாசிலாவின் ஆதனம். தெற்கு — இறப்பியேல் அந்தோனிப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலும். முற்பதிவு D235/224

நா. செல்லையா,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
37, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிளிக்கேசன்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. 6262

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின்

யாழ்ப்பாணம், வண். கிழக்கு சுப்பர் தம்பிப்பிள்ளை
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், 73, ரெம்பிள் வீதி
1. கணபதிப்பிள்ளை நடராசாவும்,
2. மனைவி வாலாம்பிகையும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 6262-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும்காணிகளில் 1-ம்,2-ம் துண்டுக்காணிகள் 1961-ம்ஆல அக்டோபர்மீ 27-ம்வ (27-10-61) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிதொடக்கமும், 3-ம் துண்டுக்காணி 1961-ம்ஆல அக்டோபர்மீ 28-ம்வ (28-10-61) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கமும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2635-39 சதமும், மேலும் ரூபா 2073-79 சதத்துக்கும் 28-11-60 திகதி தொடக்கம், இறுக்கும்வரைக்கும்வருடமொன்றுக்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு 294 ரூபாவும், அப்பிளிக்கேசன் (மனு) செலவு 15 ரூபாவும், கொமிஷன் செலவு 9 ரூபாவும்.

### காணிகள் விபரம்

1 வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி, வெளிக்கண்டல் கோவிற்பற்று, வெளிக்கண்டல் இறை "அத்தன்தறை பிட்டிவயல்" நெற் பர. (50) ஐம்பது. இதற்கு எல்லை: கிழக்கும், வடக்கும்—சுவாமிநாதர் சின்னத்தம்பிக்கும், பங்காளர்களுக்கும், குமாரசாமி மனைவி சரஸ்வதிக்குமுரிய ஆதனம். மேற்கு — சுவாமிநாதர் சின்னத்தம்பிக்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனமும், வெளிக்கண்டல் சேலம்பாய்ப் பிள்ளையார் கோவிலும். தெற்கு — சேலம்பாய்ப் பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனம். இது முழுவதும்.

2. ஷ வெளிக்கண்டல்இறை "அத்தன்தறை பிட்டிவயல்" நிலப்பரப்பு (4) காலு. (பிரசித்த நொத்தாரிஸ் V. S. கார்த்திகேசு அவர்களால் 5013-ம் இலக்கத்தில் 1-9-41-ல் முடிந்த உறுதிப்படி இதில் கால் (¼) பரப்புக் கிராமச் சங்கத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது) இதற்கு எல்லை: கிழக்கு—குமாரசாமி மனைவி சரஸ்வதிக்குரியஆதனம். வடக்கு —பழனிப்பிள்ளை கந்தையாவுக்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனம். மேற்கும், தெற்கும்—சுவாமிநாதர் சின்னத்தம்பிக்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனம். இது முழுவதிலும் சொரியலாய்க் கால்வாசிப் பங்கு.

3. ஷ டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, நல்லூர்க் கோவிற்பற்று, நல்லூர் இறை "வீரபத்திரன் வளவும், அன்னக்கண்டான் வளவும்" நிலப்பரப்பு (2). இரண்டு கல்வீடும்,குசினியும், செய்பயிர் வான்பயிர்களும், மற்றும் அதற்குரியவைகளும். இதற்கு எல்லை: கிழக்கு—ரெம்பிள் ரேட். வடக்கு — V. நல்ல பெருமாள் செட்டியின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம். மேற்கு—பாலசிங்கம் மனைவி யோகம்மாளின் ஆதனம். தெற்கு—S. வயித்திலிங்கத்தின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனங்கள். இது முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனர்,

643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம், 12-9-61

## நேர்த்தியின் பூர்த்தி

எனது தகப்பனுருக்குவந்த சலரோகக் கட்டைக் குணமாக்கும்படியாகச் சகாய மாதாவுக்கு ஒன்பது புதன்கிழமை நவநாள் செய்தும், ஐந்து வெள்ளிக்கிழமை சிலுவைப்பாதை செய்தும் ஒப்புக்கொடுத்துவந்தேன். காத்திராப்பிரகாரம் எனது தகப்பனுர் 9-ம் புதன்கிழமை பூரணசுகமடைந்து வீடுவந்து சேர்ந்தார். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

பண்டத்தரிப்பு கே பிரான்சிஸ்கா

---

சங். பிறதர் எஸ். மரியாம்பிள்ளை அவர்கள் பரமபதமடைந்த

## 2-வது வருட ஞாபகம்

தோற்றம்: 29-8-95 மறைவு: 24-9-60

இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக 24-9-61-ல் சில்லாலை, தேவமாதாவின் ஆசனக்கோவிலில் ஒரு திவ்விய பூசைப் பலி நடக்தேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே, சங். சந்நியாசிகளே, சங். கன்னியாஸ்திரிகளே, உற்ற நண்பர்களே, அவரால் ஞானஉதவியை அடைந்தவர்களே அவருடைய ஆன்மா நித்தியஇளைப்பாற்றியை அடையும்படி மன்றுடுவீர்களென நம்பியிருக்கிறோம்.

சில்லாலை.

---

ம. செல்லம்மா சுவக்கீனு அவர்கள் அமரத்துவம் அடைந்த

## 1-ம் வருட நினைவுதினம்

மறைவு: 27-9-60

"சீவியத்தில் என்னை அருமையாக நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாது நேசியுங்கள்."

இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே, சங். கன்னியாஸ்திரிகளே, இனசனர் சிநேகிதர்களே, இவவின்ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்கின்ருேம்.

எதிரே வரும் 27-9-61 புதன்கிழமை இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காகப் பின்வரும் இடங்களிற் திக்கப்பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

வவுனியா அர்ச். அந்தோனியார் ஆலயம்
யாழ்ப்பாணம் சென் யேம்ஸ் ஆலயம்
இரத்தினபுரி சென் யேம்ஸ் ஆலயம்

இவவை இழந்து துயருறும்
பிள்ளைகள்: ம. பத்திநாதர்
சிஸ். மேரி பிளண்டீனு
மருமகள்: இ. ஞானம்மா.
பேரப்பிள்ளைகள்: அ. ரேசம்மா,
ம. சுவாம்பிள்ளை.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3325

யாழ்ப்பாணம், சுதுமலை
1. கணபதிப்பிள்ளை நடேசரும், பெண்
2. சிவபாக்கியமும் — வழக்காளிகள்

எதிராக

இருபாலை, கந்தையா காசிலிங்கம்
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3325-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1961-ம் வருடம் ஐப்பசிமாதம் 21-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1,529/16-ம், 20-4-60 தொடக்கம் 24-10-60 வரைக்கும் ரூபா 1000/-த்துக்குப் 10வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 190 ரூபா 65 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம்பகுதி வலிகாமம் கிழக்குக் கோப்பாய்க் கோவிற்பற்று கோப்பாய் தெற்கு இறை "அடிப்படி" பர. நில. இலா. 58-ம், குளி $9\frac{1}{8}\frac{4}{2}$-ம், பயிர்வகைகளும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு—வேதாரணியகுருக்கள் முத்துக்குமாரசாமி குருக்களின் ஆதனம். மேற்கு —ஆறுமுகம் கனகசபைக்கும், மறுபேருக்கும்உரிய ஆதனம். தெற்கு—ரேட்டும், கைலாசபிள்ளை இராமலிங்கத்தின் ஆதனமும். இதில் சொரியலாய் அரைவாசி. இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுக் கந்தோரில் K. $\frac{107}{158}$-ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்

16 A, அம்மன் ரேட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

---

## திரு. ரி. ஜே. இம்மனுவேல் அவர்களின் தேகவியோகம்

மட்டக்களப்பு மாவட்ட வித்தியாதரிசியாய் இருந்துவந்தவரான திரு. ரி. ஜே. இம்மனுவேல்அவர்களின் எதிர்பாராத அகால மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டுக் கவலைப்படார்தாரும், பிரலாபியாதாரும் இல்லை எனலாம். இவர் சிறந்த தமிழறிஞராயும், அப்போது யாழ்ப்பாணக் கன்னிகாமடத்து ஆசிரியகலாசாலைப் பிரதமாசிரியராயும், கொழும்புத்துறை வித்தியாசாலையிலே நெடுங்காலம் ஓர்ஆசிரியராயும் விளங்கியிருந்த பண்டிதர் எ. தோமஸ் அவர்களின் இரண்டாவது புதல்வர். யாழ்ப்பாணம் சப்பெல்வீதியில் வசித்திருந்த திரு. பி. பெஞ்சமின் தம்பதிகளின் இரண்டாவதுபுதல்வியை இவர் விவாகஞ் செய்திருந்தார். இவருக்கு ஒருபுத்திரரும், இருபுத்திரிகளும் உள்ளனர். இவரின் பிரேதம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுச் சென்ற 13-ந் திகதி புதன்கிழமைகாலை சகலவரிசைகளுடனும் அடக்கஞ் செய்யப்படலாயிற்று. தமது சிறந்த கல்விச்சேவையாலும், சிறந்த குணவிசேஷங்களாலும் எல்லோர் மத்தியிலுமே நன்மதிப்பைப் பெற்றிருந்த இவரின் பிரிவாலே துயருற்று வருந்தும் பாரியார், பிள்ளைகளுக்கும், மற்றும் இனசனருக்கும் எமது அனுதாபமும் உரியதாகுக.

R. I. P.

---

யாழ்ப்பாண மாநகரசபைக்

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## சந்தைக் குத்தகை —1962

கீழ்வரும் சந்தைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 3-10-61-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப்பத்திரத்தில் தயாரிக்கப் பட்டனவாகவும், அரக்கு முத்திரை இடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 3-10-61-ம்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிவரை வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர்கள் | கேள்விப் பத்திரத்தின் விலை | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய பொறுப்புப்பணம் | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரிஸ் உறுதிக்காகச் செலுத்தவேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. பெரியகடை மாக்கறிச் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 2. பெரியகடை மீன்சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 3. பெரியகடைக் காலே | 10-00 | 250-00 | 250-00 |
| 4. சின்னக்கடைச் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 5. செங்குந்தர் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 6. அரியாலைச்சந்தை பழையது | 2-50 | 50-00 | — |
| 7. அரியாலைச் சந்தை புதியது | 2-50 | 50-00 | — |
| 8. முத்திரைச்சந்தை | 2-50 | 50-00 | — |
| 9. கொழும்புத்துறைச் சந்தை | 2-50 | 50-00 | — |
| 10. நாவாந்துறைச் சந்தை | 2-50 | 50-00 | — |
| 11. பாஷையூர்ச் சந்தை | 2-50 | 50-00 | — |
| 12. பண்ணைமீன்சந்தை | 2-50 | 50-00 | — |
| 13. பலாலிரேட் சந்தை | 2-50 | 50-00 | — |
| 14. நாச்சிமார்கோவில் சந்தை | 2-50 | 50-00 | — |
| 15. பெரியகடை மீன் சந்தைக் கருகாமையில் சயிக்கிள் பாதுகாத்துக் கொடுக்குமிடம் | 2-50 | 50-00 | — |
| 16. பெரியகடை மீன்சந்தையில் சாமான்கட்டும் கடதாசிகள் விற்குமிடம் | 2-50 | 50-00 | — |
| 17. சின்னக்கடை மீன்சந்தையில் சாமான்கள்கட்டும் கடதாசிகள் விற்குமிடம் | 2-50 | 50-00 | — |
| 18. சின்னக்கடைச் சந்தைக்கு அருகாமையில் சயிக்கிள் பாதுகாத்துக் கொடுக்குமிடம் | 2-50 | 50-00 | — |

இதரவிபரங்களை, கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்து அறியலாம்.

கட்சன் செல்வராசா,
பதில்ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
15-9-61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச வேளை

—நமது நிருபர் அமலன்

● அன்னையின் தியாகம் ● குஷ்டரோகிகளும் கன்னியரும் ● சினிமாவில் வேதாகமக் கதைகள்
● பரிசுத்தவார்த்தையின் போதகசபை ● கர்தினலின் கடைசிவிருப்பம் ● மூன்றுவருடங்களுக்கு முன்னல்
● அத்தான்எழுதிய அஞ்சல்

ஆஞ்சலா: மேரிநோல் சஞ்சிகையில் ஒரு அன்னையின் தியாகத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையில் அந்த அன்னை பாராட்டுதற்குரியவள்.

அன்ரன்: என்ன, சின்னக்கா வெகு குஷியாகக் காணப்படுகிறு. சின்னத்தானின் லிகிதங்கள் ஏதும் கிடைத்ததோ?

அம்மா: அவன் கிடக்கிறுன். நீ சொல்லு ஆஞ்சலா, அந்தத்தாய் செய்த காரியத்தை.

ஆஞ்சலா: லோ மோ என்பது அந்த அம்மையின் பெயர். அவள் கணவர் பெரிய வர்த்தக நிறுவனமொன்றின் உரிமையாளர். இந்த அன்புத்தம்பதிகட்கு அழகான புதல்வியொருத்தியும் இருந்தாள். ஒருநாள் தனது கரத்தில் வெள்ளி நிறமான புள்ளியொன்றைக் கண்டாள் லோ மோ. ஊசியினுல் குத்திப்பார்த்தாள்; வலிக்கவில்லை. கொடிய குஷ்டரோகம் தன்னைப் பிடித்திருக்கிறது எனக் கண்டாள். விஷயம் வெளிக்குத் தெரிந்தால் தனது குடும்பம் நாசமாய்ப் போகுமென்பதை உணர்ந்தாள். குஷ்டரோகியின் பெண்ணை யார் மணக்க முன்வருவார். அவள் கணவருடன் தொடர்பு கொள்வதையும் நிறுத்திவிடுவார்களே. இறைவனைப் பிரார்த்தித்தாள். இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தாள். நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு அன்று இரவே வீட்டைவிட்டுப் புறப்பட்டாள். ஒருவருக்கும் தெரியாமல் மேரிநோல் போதகசபையார் நடாத்தும் குஷ்டரோகர் மருத்துவமனையில் போய்ச் சேர்ந்தாள்.

நிர்மலா: தனது குடும்பத்துக்காக, அருமைப்புதல்வியின் வருங்கால வாழ்வுக்காக அந்த அன்னை செய்த தியாகம் மெச்சுதற்குரியது.

ஆஞ்சலா: சில வருடங்களின் பின்னர் லோ மோ மருத்துவமனையாரின் அனுமதியுடன் திரும்பி வந்தாள். தனதில்லத்தின் முன்னுள்ள பற்றைக் காடொன்றில் மறைந்தவண்ணம் கவனித்தாள். அவ்வின் அன்புக் கணவர் வர்த்தக நிலையத்துக்குப் புறப்படுவதற்கு முன்னல் தனது உருவப் படத்தை உருக்கத்துடன் நோக்குவதைக் கண்டாள். மணமான தனது புதல்வி குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பதையும் பார்த்து ஆனந்தக்கண்ணீர்சொரிந்தாள். தாங்கொணு வருத்தத்துடன், ஆயின் மனத்திருப்தியுடன் மருத்துவமனைக்குத் திரும்பிச் சென்ருள். யான் இனிமேல் மனச் சமாதானத்துடன் மரிப்பேன் எனத் தன்னைக் கவனிக்கும் கன்னிகையிடம் கூறினுளாம் அந்தமாது.

பெரியண்ணு: குஷ்டரோகம் உண்மையில் மிக அருவருப்பான நோய். நான் மட்டக்களப்பில் கடமையாற்றும் போது அங்கு மாந்தீவு என்னுமிடத்திலுள்ள குஷ்டரோகர் வைத்திய சாலைக்கு அடிக்கடி செல்வேன். இங்கு கடமையாற்றும் கன்னியர்கள் குஷ்டரோகரிடையே செய்யும் சேவையில் தங்களையே பரித்தியாகம் செய்கின்ருர்கள்.

கார்மெலா: தங்களால் இயன்ற அளவைத்தானே அவர்கள் செய்ய முடியும். தங்களையே எப்படித் தியாகம் செய்யலாம்?

பெரியண்ணு: குஷ்டரோகம் மாற்ற முடியாத ரோகம் என்பது உனக்குத் தெரியாதா? இந்நோயாளிகளிடையே பழகுபவர்கட்கும் காலஞ்செல்ல நோய் தொற்றிக்கொள்ளும். அவர்களும் ஈற்றில் இவ்வியாதியினுலேயே மரிப்பர்.

அன்ரன்: அப்படியானுல், தங்கள் வருங்காலத்தையும் நல்லாய்த்தெரிந்துகொண்டே இவ்வியாதிக்காரரிடையே பணியாற்றுகிருர்கள்.

பெரியண்ணு: ஆம், அங்கு செல்லும் பெரிய வைதியர்கள் தாதிமாரான கன்னியர்களிடம் நோயாளிகளைப்பற்றித் தெரிந்து கொண்டு சிகிச்சை வகைகளையும் கூறிவிட்டுச் சென்றுவிடுவார்கள். அந்தச் சிறிய தீவில் இரவுபகலாக நோயாளிகள் மத்தியில் பணியாற்றும் கன்னியர்களின் சேவையைப் பாராட்டாதவர்களே கிடையாது.

அப்பா: கிறிஸ்துநாதர் காலத்திலும் குஷ்டரோகர்களை நகருக்குப் புறம்பே ஒதுக்கிவிடுவார்களென சுவிசேஷத்திலிருந்து காணக்கிடக்கிறதே.

அன்ரன்: பென் ஹர் படத்திலும் கிறிஸ்துநாதர் அந்த அரசகுலயூதனின் தாயையும், தங்கையையும் குஷ்டரோகத்திலிருந்து குணமாக்கியதைப் பார்த்தோமே.

கார்மெலா: என்ன இருந்தாலும் யேசுக்கிறிஸ்துநாதரின் முகத்தை இந்தப்படத்தில் காட்டவில்லையே. பாடுகளை அழகாகச் சித்திரித்தவர்கள் ஆண்டவரின் முகத்தை மறைத்துவிட்டதோடு அவரின் குரலையும் கேட்காதவாறு செய்திருக்கிருர்கள். இது பெரிய குறையல்லவா?

அகஸ்ரின்: இப்படித்தான் பென் ஹர் திரைப்படத்தைப் பார்த்த பலரும் கூறுகிருர்கள். ஆயின், கிறிஸ்துவின் புனித வாழ்வைச் சித்திரிக்கும்போது அவரின் மாட்சிமைதங்கிய வதனத்தை மறைத்திருப்பதும் குரலைக் கேட்காதவாறு செய்திருப்பதும் திரைப்படத் தயாரிப்பில் ஒரு புதிய உத்தி. "இது படம் பார்ப்பவர்கள் கிறிஸ்துவை ஒரு தெய்வீக மனிதராகச் சிந்திக்க ஏதுவாகும்" எனப் படத்தின் டைரக்டர் வில்லியம் வைலர் கூறியிருக்கிருர்.

அப்பா: மதசம்பந்தமான படங்களை வெகு சிரமத்துடன் மதஉணர்ச்சி கெடாதவாறு தயாரித்தால் நல்ல இலாபம் அடையலாம் என்பதற்கு பென் ஹர் திரைப்படம் ஒரு எடுத்துக் காட்டல்லவா?

அகஸ்ரின்: ஆம், ரூப், சாம்சன் அண்ட் டலைலா, பத்துக்கற்பனைகள், பென் ஹர் என்ற திரைப்படங்கள் வேதாகமக் கதைகட்குப் பெரிய மகத்துவத்தைக் கொடுத்ததுடன் தயாரிப்பாளர்கட்குக் கோடிகோடியாக இலாபத்தையும் கொடுத்தன. இவற்றின் வெற்றியைக்கண்டுதானே பெரிய மீனவன் என்ற அர்ச். இராயப்பர் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்ட படத்தையும் அரசர்க்கு அரசர் என்ற பெயரில் கிறிஸ்துவின் வாழ்க்கையையும்பிரமாண்டமான வகையில் தயாரித்திருக்கிருர்கள். ஒரு கன்னியின் கதை, புதுமை, ஆன்மாக்களின் சதி ஆகிய கத்தோலிக்க மார்க்கத்தை அடிப்படையாகக்கொண்ட சமூகப்படங்கள் சக்கைபோடு போட்டன. ரூத்தின் சரிதையும், பிரான்சிஸ் ஒவ் அசிசியும் தனிப்புகழைச் சம்பாதித்துக் கொண்டே வருகின்றன. புனிதமாக, கத்தோலிக்க உணர்ச்சி கெடாதவாறு தயாரிக்கப்படும் கத்தோலிக்கத் திரைப்படங்கள் வெற்றியடைவதுடன் அதிகப்படியான நன்மையும் அளிக்கும் என்பதற்கு இவை நல்ல உதாரணங்களல்லவா?

அம்மா: இந்தப் பத்திரிகை எங்கிருந்து வருகிறது? அர்ச். பத்திரிசியாரின் படத்தைப் போட்டிருக்கிருர்களே?

அன்ரன்: பரிசுத்த திருநாமத்தின் வேதபோதகர்கள் சபையாரால் இந்தப் பத்திரிகை பிரசுரிக்கப்படுகிறது. அயர்லாந்திலிருந்து பிரசுரமாகிறது. இதுவருடாந்த மலர். எனவே, புனித பத்திரிசியார் வருடத்தின் நினைவாகப் பத்திரிசியாரின் படத்தைப் பிரசுரித்திருக்கிருர்கள்.

கார்மெலா: என்ன அன்ரனும் கத்தோலிக்க சஞ்சிகைகளில் கருத்தைச் செலுத்த ஆரம்பித்துவிட்டானே.

அன்ரன்: இது ஒன்றும் எட்டாவது அதிசயமில்லை.

பெரியண்ணு: இரண்டு பேரும் சண்டை பிடிப்பதை வேண்டுமானுல் ஒன்பதாவது அதிசயமெனச் சொல்லிக் கொள்ளலாம். நிற்க, எங்கள் நாட்டில் அமலோற்பவசபையார் வேதபோதகத் தொண்டில்ஈடுபட்டிருப்பதைப்போலப் பரிசுத்த திருநாமத்தின் சபையாரும் விசுவாசப்பரப்புதல் நாடுகளில் கர்த்தரின் வார்த்தையைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ளார்கள். **வார்த்தை** என்ற இந்தமாத சஞ்சிகையில் அச்சபையாரின் தொண்டுகளைப்பற்றியும் மற்றும் ஏராளமான கத்தோலிக்க நிகழ்ச்சிகளைப்பற்றியும் நிழற்படங்களின்மூலம் சித்தரிக்கின்ருர்கள்.

அப்பா: எவ்வளவு படங்கள்? இதை அச்சடிக்கப் பெருஞ்செலவு பிடிக்குமே?

அகஸ்ரின்: ஏறக்குறைய ஒன்பது இலட்சம் பிரதிகளை மாதாமாதம் அச்சடிப்பதால் குறைந்த செலவில் வெளியிட ஏதுவாகிறது. கானு, பெல்சியகொங்கோ, இந்தியா, இந்தோனிசியா, யப்பான், சீனு, பிலிப்பைன், அவுஸ்திரேலியா ஆதியாமிடங்களில் இச்சபைக்குருமார் தொண்டாற்றுகிருர்கள். இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, அயர்லாந்து ஆதியாமிடங்களில் தலைமைக் காரியாலயங்கள் உண்டு. இச்சபையில் 28 மேற்றிராணிமாரும், 2,700 குருமாரும் அங்கத்துவம் வகிக்கின்றனர். 121 மருத்துவமனைகளையும், 2,000 பாடசாலைகளையும், 2 சர்வகலாசாலைகளையும பரிசுத்த வார்த்தையின் சபையார் நிர்வகித்து வருகின்றனர்.

பெரியண்ணு: அண்மையில் காலஞ்சென்ருரே பாப்பரசரின் இராச்சிய மந்திரியார் கர்தினல் தார்டினி, அவருடைய சடலத்தை ஆண்டவரவர்களின் விருப்பத்திற்கிணங்க ரோமாபுரிக்கு வெளியே 50 மைல் தூரத்திலுள்ள கன்னியர்மடமொன்றிலுள்ள சிற்றுலயத்தின் பக்கமாகப் புதைத்துள்ளார்களாம். அங்கு ஒரு சிறிய நினைவுச் சின்னம் அமைப்பது போதுமானதெனவும் அவர் கேட்டுக் கொண்டாராம்.

அம்மா: தேவனுடைய அடியார்கள் தாழ்மையாகத்தானே நடந்து கொள்வார்கள்.

பெரியண்ணு: பெரிய மண்டபம் கட்டப்பட்டால் தரிசகர்கள் அதைத் தரிசிப்பதில் அதிக சிரத்தை காட்டுவர். சிறிய சின்னமாயிருப்பின் அங்கு புதைக்கப்பட்டவருக்காக வேண்டிக் கொள்ள வேண்டுமென்ற நினைவும் உண்டாகும் எனக் கர்தினல் தார்டினி கூறியுள்ளார். இந்தக் கன்னியர் மடத்தைக் கட்டியெழுப்புவதில் ஆண்டவரவர்கள் அபார முயற்சியெடுத்துக் கொண்டார்களாம். தனது வெள்ளியாலான மேசையை இச்சிற்றுலயத்தின் தேவநற்கருணைப் பேழையாக மாற்றும்படியும் அவரது மரணசாதனத்தில் கூறியுள்ளார்.

அம்மா: இன்னுமொரு பெரிய கர்தினலாண்டவர் செத்துப்போனராமே.

அகஸ்ரின்: அவர்தான் கர்தினல் கனுலிஆண்டவர். வத்திக்கானின் பிரதான வைபவங்களைத்தினதும் பிரதம நிர்வாகியாகத் திறமையுடன் கடமையாற்றியவர். அண்மையில் எலிசபேத் அரசி தம் கணவருடன் வத்திக்கான் சென்றபோது அது சம்பந்தமாக இவர் செய்துவைத்த ஏற்பாடுகளை எலிசபேத் அரசியே புகழ்ந்திருக்கிருர். சென்ற பாப்பு தேர்தலில் இவரும் பாப்பவாகத் தெரியப்படலாமென எதிர்பார்க்கப்பட்டவர். பாப்பரசர் தெரியப்பட்டவுடன் அர்ச். இராயப்பர் தேவாலயத்தின் உப்பரிகையில் நின்று அருளப்ப பாப்பரசரின் தெரிவை உத்தியோக பூர்வமாக அறிவித்தவர் இவர்தான்.

அன்ரன்: மூன்றுவருடத்துக்கு முன்னர் நடைபெற்றுலும் இப்போதும் அந்தச் சம்பவம் நினைவாக இருக்கிறதே.

கார்மெலா: ஆமாம், வத்திக்கான் நிலையத்தை வானுெலியில் திருப்புகிறேனெனச் சொல்லி அன்ரன் கோமாளித்தனம்பண்ணியதும் பெரியண்ணு கடைசியில் ஆத்திரம் தாங்காமல் அன்ரனைக் குட்டியதும், தானே நிலையத்தைத் தெரிந்தெடுத்ததும் சொல்லி வைத்தாற்போல, சில நிமிடங்கட்குள்ளேயே பாப்பரசர் தெரிந்தெடுக்கப்பட்டார், அறிவித்தலை எதிர்பாருங்கள் என்ற செய்திவந்ததும் இன்னும் நினைவில்தான் இருக்கிறது.

அகஸ்ரின்: தன்னுடைய 84-வது வயதில் கர்தினல்கனுலி ஆண்டவர் எவ்வளவு கம்பீரமாக அந்தவார்த்தைகளை உச்சரித்தார். உங்களுக்கு மாபெரும் சுபசெய்தியைக் கூறுகிறேம். மீண்டும் நமக்குப் பாப்பு இருக்கிருர், அவர்தான் கர்தினல் ரொங்கொல்லி ஆண்டவரவர்கள். அன்னர் 23-ம் அருளப்பர் என்ற நாமத்தைத் தெரிந்தெடுத்துள்ளார். கிறிஸ்துவே உமக்குப் புகழ் உண்டாவதாக.

அப்பா: எங்கள் நாடுகளில் தேர்தல்கள் நடைபெற்றுல் தோல்வியடைந்தவர்கள் ஆத்திரத்துடன் என்னவெல்லாம் சொல்லுவார்கள். பாப்புதேர்தலில் கலந்துகொள்ளும் கர்தினல்மாரும் மனிதர்தானே. தாங்கள் தெரிந்தெடுக்கப்படவில்லையேயென எரிச்சலையும், ஆத்திரத்தையும் அவர்கள் உள்ளத்தில் கிளப்பச் சாத்தான் எவ்வளவு விழிப்பாய் இருந்திருப்பான். ஆனுல், தங்களுள் ஒருவர் பாப்புவாகத் தெரிந்தெடுக்கப்பட்டவுடன் அவர்கள் இறைவனின் சித்தத்துக்குப் பணிந்த மனதுடன், மகிழ்ச்சியாகவும், புதியபாப்புவுக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday Septemder 23 1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org